# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2423/ 18 - 2025 පෙබරවාරි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.02.13**

2423/18 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) மாகாண - சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மாகாண சபை அறிவித்தல்கள்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஊ ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 154 இ ஆம் உறுப்புரையின் கீழ் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 19 (5) ஆம் உபபிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்**

மேல் மாகாணத்தின் ஆளுநர் ஹனிப் யூசுப் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஊ ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 154 இ ஆம் உறுப்புரையின் கீழ் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 19 (5) ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க, மேல் மாகாண சபை நிதியத்திற்குரிய அபிவிருத்தி திட்டங்களைத் தயாரிக்கும் மற்றும் நடைமுறைப்படுத்தும் விதிகளை இங்கு வெளியிடுவதாக அறிவிக்கிறேன்.

**ஹனிப் யூசுப்**
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண சபை கட்டடத்தில் அமைந்துள்ள
மேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில்,
பத்தரமுல்ல,
2025, பெப்புருவரி 07.


1A - PG7028 - 07 (2025/02)



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## விதிகள்

1. இந்த விதிகள் மேல் மாகாண சபை நிதியம் தொடர்பாக ஒரு குறிப்பிட்ட நிதியாண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான அளவுகோல்களை அமைப்பதற்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசி 2190/25 ஆம் இலக்க, மற்றும் 2020 ஒகத்து மாதம் 25 ஆம் திகதி அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டிருந்து இடைக்கிடையே திருத்தப்பட்ட. மேல் மாகாண சபை நிதியம் தொடர்பாக ஒரு குறிப்பிட்ட நிதியாண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்குரிய விதிகளை இல்லாதொழிப்பதற்கும் ஏற்பாடுகளை ஏற்படுத்துவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது .

2. இந்த விதிகள் 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாண சபை நிதிக்கு பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல் மற்றும் செயல்படுத்துவதற்குரிய விதிகள் என அழைக்கப்படும்.

3. மேல் மாகாண சபை நிதியத்திற்குரிய மாகாண அபிவிருத்தி நிதி மூலத்தின் கீழ் ஒரு நிதியாண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டம் மற்றும் நடைமுறைத் திட்டத்தை தயாரிக்கும் போது மேல் மாகாணத்தின் ஒவ்வொரு மாகாண அமைச்சும் பின்வரும் அளவுகோல்களின்படி செயல்பட வேண்டும் என்று நான் இதன்மூலம் பணிப்புரை விடுக்கின்றேன்.-

(1) மேல் மாகாண சபை நிதியத்துடன் தொடர்புடைய மாகாண அபிவிருத்தி நிதி மூலத்திற்குரிய வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை தயாரிக்கும் போது தேசிய கொள்கை கட்டமைப்பிற்கு இணங்க மேல் மாகாணத்திற்கான அபிவிருத்தித் திட்டங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(2) மத்தியதர விளைவு கட்டமைப்பிற்குள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட முக்கிய பகுதிகள், நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைய மேம்பாட்டுத் திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும்.

(3) அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதில், இதுபோன்ற திட்டங்கள் இரு இடங்களில் இடம்பெறுவதை தடுக்க அமைச்சின் விடய எல்லைக்குள் நேரடியாக வரும் திட்டங்களுக்கான திட்டங்களைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இங்கு திட்ட அதிகாரம் மற்றும் செயல்பாட்டு அதிகாரத்தை சம்பந்தப்பட்ட அமைச்சின் கீழ் உள்ள நிறுவனத்திற்கு வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

(4) அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதில், அனைத்து திட்டங்களுடனும் தொடர்புடைய திட்ட அதிகாரம் மேற்பார்வைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

(5) திட்டங்களின் நிலைத்தன்மையையும் செயல்திறனையும் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக கவனம் செலுத்தவேண்டும்.

(6) பின்வரும் பிரிவு இலக்கம் 4 தொடக்கம் 29 வரையிலான ஒவ்வொரு பிரிவின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் கீழ் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பாக எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளபோதும் 109 செலவினத் தலைப்பின் கீழ் (பிரதம செயலாளர் செலவினத் தலைப்புகள்) செயல்படுத்தப்படும் பயிற்சிகளைத் தவிர, அந்தந்த விடயங்கள் தொடர்பான அத்தியாவசிய தொழில்நுட்பப் பயிற்சித் திட்டங்கள் மட்டுமே செயல்படுத்தப்பட வேண்டும்.

இதற்காக தோராயமான மதிப்பீட்டுடன் கூடிய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு திட்ட அதிகாரியின் மூலம் அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டும். இரண்டு மில்லியன் ரூபா வரை மேலே உள்ளபடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைவிடக் கூடிய மதிப்புள்ள திட்டங்களுக்காக, அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி செயல்பட வேண்டும்.

(7) திட்டங்களை அங்கீகரிக்கும் போது பின்வரும் தகவல்கள் திட்ட முகாமைத்துவ தரவு அமைப்பில் உள்ளிடப்பட வேண்டும். இந்தத் தகவலை, விடயத்திற்குப் பொறுப்பான உதவி/பிரதி பணிப்பாளரின் (திட்டமிடல்) பரிந்துரையின் கீழ் விடயப் பொறுப்பு அலுவலரினால் உள்ளடக்கப்பட வேண்டும்.

(i) திட்டத்தின் பெயர்
(ii) நிதி ஒதுக்கீடு செய்த அமைச்சு
(iii) நிதி ஆதாரம்
(iv) நிகழ்ச்சித் திட்டம்
(v) ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படும் செலவினத் தலைப்பு மற்றும் அதன் இலக்கம்
(vi) கூறு
(vii) தலைப்ப
(viii) உப விடயம்
(ix) பரந்த செயல்பாடுகள்

(x) செயல்பாடுகள்
(xi) நிலையான வளர்ச்சி இலக்குகள்
(xii) திட்ட அதிகாரி
(xiii) செயல்படுத்தும் அதிகாரி
(xiv) துணை நிறைவேற்று அதிகாரம்
(xv) திட்டத்தை அங்கீகரிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ
(xvi) எந்த நிறுவனத்திற்கு நிதி விடுவிக்கப்படும்?
(xvii) திட்டத்திற்கு உரியதாக பணம் செலுத்தும் நிறுவனம்
(xviii) கட்டத்தைக் கொண்ட திட்டம்: ஆம்/இல்லை
(xix) செயல்படுத்தும் நிலையில் உள்ள ஒரு கட்டங்களைக் கொண்ட திட்டமாக இருந்தால், பின்வரும் தகவல்கள் பூரணப்படுத்தப்பட வேண்டும்

(அ) மொத்த மதிப்பிடப்பட்ட செலவு: ரூ
(ஆ) திட்டம் மொத்த மதிப்பிடப்பட்ட செலவிற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டால், ஒப்பந்தத் தொகை: ரூ
(இ) திட்டத்தை முழுமையாக நிறைவுசெய்ய மேலதிகமாக தேவையான நிதி: ரூ
(ஈ) திட்டத்தை நிறைவு செய்ய தற்போது செயல்படுத்தப்படும் உப திட்டங்களின் இலக்கம்:
(உ) திட்டம் தற்போது பயன்பாட்டில் உள்ளதா/பயன்பாட்டில் இல்லையா?

(8)(i) பல ஆண்டுகள் எடுக்கும் புதிய கட்டுமானத் திட்டங்களைத் திட்டமிடும்போது, திட்டத்தின் மொத்த மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட வேண்டும், தேறிய ரீதியில் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் முடிக்க எதிர்பாக்கப்படும் அளவுகள் முன்வைக்கப்பட வேண்டும் . அவ்வாறே எதிர் வரும் ஆண்டுகளில் இந்த திட்டத்திற்கு எவ்வாறு நிதி வழங்கப்படும் என்பதையும் தெளிவாக்க வேண்டும்.

(ii) மேலும், ஒரு வருடத்திற்குள் முடிக்க எதிர்பாக்கப்படும் திட்டங்களுக்கு தேவையான மொத்த ஒதுக்கீட்டை எவ்வாறு பெறுவது என்பது குறித்த சரியான திட்டமிடல் இல்லாமல் திட்டங்கள் தொடங்கப்படக்கூடாது

(9) ஒரு சொத்தின் புனர் நிர்மாணம் அல்லது கட்டுமானத்திற்கான பிரேரணைகளைச் சமர்ப்பிக்கும் போது அந்தக் காணியின் உரிமை ஒரு அரச அல்லது அரைவாசி அரசுக்குரிய நிறுவனத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். மேலும் , கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும் பழுதுபார்ப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு முன்னர், சொத்து எதிர்காலத்தில் தெளிவாகப் பயன்டுத்தக்கூடியது என்பதை உறுதிப்படுத்த வேண்டும், மேலும் எதிர்காலத்தில் கட்டுமானம் எவ்வாறு பராமரிக்கப்படும் என்பது குறித்து தெளிவான திட்டத்தை வகுக்க வேண்டும்.

(10) சந்பந்தப்பட்ட பிரிவுகளுக்காக குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளுக்கு மேலதிகமாக அவசரத் தேவைகள் மற்றும் சிறப்பு சந்தர்ப்பங்களில் திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் போது, சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சின் செயலாளரின் அல்லது செயல் ஆணையத்தின் பரிந்துரையுடன் ஒரு நியாய அறிக்கை ஒன்று பிரதம செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக பிரதம செயலாளர் திருப்தி அடையும்போது, அந்தத் திட்டங்களைச் செயல்படுத்த பிரதம செயலாளரின் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

(11) மாகாண சேவைகள் நடைபெறும் அரசின் பதிவுசெய்யப்பட்ட பொதுக் கட்டடங்களை அபிவிருத்தி செய்வதற்கும் நிர்மாணிப்பதற்கும் செயல்பாட்டு அதிகாரசபையின் நியாயப்படுத்துதல் மற்றும் பரிந்துரையின் பேரில் ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்படலாம்.

(12) ரூ. 10 தொடக்கம் 15 மில்லியன் மதிப்புள்ள திட்டங்களுக்கு, பிரதி பிரதம செயலாளரின் (திட்டமிடல்) ஒப்புதல் பெறப்பட்ட பின் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரினால் அவற்றை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(13) ரூ. 15 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள திட்டங்களை செயல்படுத்துவதற்கு முன் திட்டக் குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்க வேண்டும்.

(14) ரூ.10 மில்லியனுக்கும் குறைவான மொத்த மதிப்பிடப்பட்ட பெறுமதியுள்ள திட்டங்களை நேரடியாக அங்கீகரிக்க மாகாண அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உள்ளது.

(15) ரூ. 10 மில்லியனுக்கும் அதிகமான மொத்த மதிப்பிடப்பட்ட மதிப்புள்ள திட்டங்களை கட்டம் கட்டமாக செயல்படுத்த வேண்டுமானால், திட்டக் குழுவின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

(16) ரூ. 50 மில்லியனுக்கும் அதிகமான திட்டங்களுக்கு (மாகாண மருத்துவமனைகளுக்கான மருத்துவ உபகரணங்கள் வாங்குவதைத் தவிர்த்து), பிரதம செயலாளர் ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்துவமான ஒரு இடர் முகாமைத்துவக் குழுவை நியமிக்க வேண்டும். அந்த அமைக்கப்பட்ட குழு, தொடர்புடைய திட்டத்தை உன்னிப்பாகக் கண்காணித்து, திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள் தேவையான தரத்திற்கும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள்

அடையப்படுவதை உறுதிசெய்ய, திட்ட அதிகாரிக்கும் செயல்படுத்தும் அதிகாரிக்கும் தேவையான வழிகாட்டுதலை வழங்க வேண்டும்.

(17) ஒவ்வொரு அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட வருடாந்த திட்டங்களில், காலநிலை மாற்றத்தைத் தணிப்பதற்கும் அதற்கு ஏற்ப பழக்கப்படுவதற்கும் நடவடிக்கைகளை சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும்போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) உள்ளூராட்சித் தாபனங்களின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ளள பொதுவான கிராமப்புற வீதிகளின் மேம்பாடு மற்றும் பராமரிப்பு மற்றும் உரிய கிராமப்புற வீதிகளில் சிறிய பாலங்கள் மற்றும் மதகுகள் போன்ற பிற மேம்பாட்டு நடவடிக்கைகள்.

(2) சன சமூக நிலையங்கள், வாராந்த சந்தைகள், குடிநீர் வழங்கல், நூலக சேவைகள், தகனச் சாலை, மயானங்களை ஒழுங்கு படுத்துதல் மற்றும் மேம்பாடு, மகப்பேறு கிளினிக்குகள், முன்பள்ளிகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பூங்காக்கள் போன்ற உள்ளூராட்சி சேவைகளின் மேம்பாடு மற்றும் பராமரிப்பு.

(3) உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசத்தினுள் சுகாதார மற்றும் சுற்றுப்புற சுகாதாரத்தை பராமரிப்பதற்காக சமூகத்தினை அறிவுறுத்துதல், கழிவு முகாமைத்துவம், பொது கழிப்பறைகள், வடிகால் அமைப்புகள் மற்றும் கால்வாய்களின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு.

(4) உள்ளூராட்சி அமைப்புகளின் கட்டமைப்பை வினைத்திறனாகவும் முறையாகவும் பராமரிக்க தேவையான வசதிகளை வழங்குதல்.

(5) அரசாங்க மற்றும் உள்ளூராட்சித் தாபனங்களின் காணிகளில் அமைந்துள்ள சன சமூக நிலையங்கள், பொதுக் கட்டடங்களுக்கு நீர் மற்றும் மின்சார வசதிகளை வழங்குதல்.

(6) உள்ளூராட்சி சேவை வழங்கலின் செயற்திறனை மேம்படுத்தத் தேவையான இயந்திரங்களை வழங்குதல் மற்றும் அலகுகளை பராமரித்தல்.

(7) இடர் முகாமைத்துவத்திற்குத் தேவையான வசதிகள் மற்றும் உபகரணங்களை அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சித் தாபனங்களுக்கு வழங்குதல்.

(8) உள்ளூராட்சி தாபனங்களில் முறையாகப் பதிவுசெய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியாக பராமரிக்கப்படும் உபகரணங்கள் போதுமானதாக இல்லாத சனசமூக நிலையங்களுக்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் பரிந்துரையின் பேரில் அதிகபட்சம் ஒரு இலட்சம் ரூபாவின் கீழ் (ரூ. 100,000) தேவையான உபகரணங்களை வழங்குதல்.

5. சுற்றாடல் விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) மாகாணத்தினுள் அரச காணிகளில் இனங்காணப்பட்ட விசேட தேவைகளின் கீழ் வசிக்கும் சமூகத்திற்கான நகர்ப்புற தோட்டங்கள், வனத் தோட்டங்கள், மூலிகைத் தோட்டங்கள் உள்ளிட்ட சூழல் பூங்காக்களை நிறுவுதல் மற்றும் அபிவிருத்தி இதற்காக ரூபா 5 மில்லியன் என்ற உச்ச எல்லையின் கீழ் ஏற்பாடுகளை ஒதுக்கமுடியும். இந்த எல்லையினை மீறும் போது இந்த விதிகளில் பொது விடயம் 3(X) இன் கீழ் அங்கீகாரத்தினைப் பெற வேண்டும்.

(2) உள்ளூராட்சி தாபனங்களுக்குரிய இனங்காணப்பட்ட சாலைகளின் இருபுறமும் பசுமையான பாதைகள் அமைத்தல்.

(3) அரசாங்க, அரசாங்க சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக கூட்டு நடவடிக்கைகளின் கீழ் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல்..

(4) நீர் மூலாதாரங்கள், கால்வாய்கள் மற்றும் நீரோடைகள், ஏரிகள் மற்றும் குளங்கள், கடற்கரைகள் மற்றும் தடாகங்கள் போன்ற நீர் வாழ் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல் , சுத்தம் செய்தல் மற்றும் மேம்பாடு செய்ய நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

(5) சுற்றாடல் தினத்தைக் கொண்டாடும் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துதல்.

(6) தேசிய மட்டத்திலான சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான திட்டங்களை செயற்படுத்துதல்.

(7) அழியும் மற்றும் ஆபத்திற்கு உட்பட்ட உயிரினங்கள் தாவரங்கள் மற்றும் விலங்குகளை பாதுகாப்பது தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

6. மின்சக்தி மற்றும் எரிசக்தி விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) முப்பரிமான மின்சாரம் மற்றும் நகரும் மின்கம்பங்கள் உட்பட பொது பயன்பாட்டிற்காக மின் இணைப்பு அமைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் நவீனப்படுத்துதல்.

(2) குறைந்த வருமானம் பெறும், பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் மற்றும் சிறப்புத் தேவைகள் உள்ள நபர்கள் உள்ள வீடுகளுக்காக பிரதேச செயலாளரின் பரிந்துரையின் பேரில் தேசிய மின்சார கட்டமைப்பில் மின் இணைப்பு மட்டும் வழங்குதல்.

(3) தேவையான சந்தர்ப்பங்களில் மாற்று எரிசக்தி வழிகளை அறிமுகப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் தேசிய மின்சார அமைப்பினைத் தொடர்புபடுத்துதல்.

(4) மாதாந்த மின்கட்டணத்தைச் செலுத்துவதற்கான முறையான அமைப்பு உள்ள உள்ளூராட்சித் தாபனங்களுக்குரிய அல்லது உள்ளூராட்சித் தாபனங்களுக்கு உரிமை கையளிக்கப்பட்ட பொதுச் சேவை வசதிகள் வழங்கும் தாபனங்கள் மற்றும் அரச காணிகளில் அமைந்துள்ள சனசமூக நிலையங்களுக்கு மின்சார இணைப்பு மட்டும் வழங்குதல்.

7. நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு என்ற விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) சமூகத்திற்கு குடிநீர் வசதிகளை வழங்க தேவையான நடவடிக்கைகளை தயாரித்தல்.

(2) குறைந்த பட்சம் 25 பயனாளி குடும்பங்களைக் கொண்ட சமுதாய நீர் திட்டங்கள் மூலம் நீர் வசதிகளை வழங்குதல்.

(3) குடிநீர் மற்றும் பிற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பொதுக் கிணறுகளின் கட்டுமானம் மற்றும் மேம்பாடு

(4) பொது நீர் மூலாதாரங்களின் நம்பகத்தன்மையை கண்டறிதல் மற்றும் நீரின் தரத்தை பரிசோதித்தல்

(5) நீர் இணைப்பு பெற முடியாத, குறைந்த வருமானம் உள்ள, நீர் பெறுவதற்கு மாற்று வழியில்லாத, பட்டியல் செலுத்தும் திறன் கொண்ட வீடுகளுக்கு பிரதேச செயலாளரின் பரிந்துரையின் பேரில் மட்டுமே நீர் இணைப்பு வழங்குதல்.

8. சுற்றுலா ஊக்குவிப்பு என்ற விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) மாகாணத்தில் அடையாளம் காணப்பட்ட சுற்றுலா கண்கவர் தளங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

(2) சுற்றுலா கண்கவர் இடங்கள் மற்றும் சுற்றுலாத் கைத்தொழிலுக்கான விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்வது.

(3) சுற்றுலாத் துறை சார்பான தொழில்களை மேம்படுத்துவதற்காக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

(4) சுற்றுலாத் துறை தொடர்பான சிறந்த தரமான சேவைகளை வழங்க பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.

(5) சர்வதேச சுற்றுலா தின கொண்டாட்டத்துடன் இணைந்து திட்டங்களை செயல்படுத்துதல்.

(6) சுற்றுலா தளங்களில் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை மேம்படுத்த பயிற்சித் திட்டங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்புகளை நடத்துதல்.

(7) நிலையான சமூக அடிப்படையிலான மேம்பாட்டுத் திட்டங்களுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

9. சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்தியம் என்ற விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) மருத்துவமனைகள், சுகாதார வைத்திய அலுவலகங்கள், ஆரம்ப வைத்திய சிகிச்சை அலகுகள், மருந்துக் களஞ்சியங்கள், உத்தியாக பூர்வ இல்லங்கள், சிகிச்சைக் கட்டடங்கள், உள்வாரி உட்பிரவேச சாலைகள், வடிகால்

அமைப்புகள் மற்றும் பிற சுகாதார துறைகளுக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளின் நிர்மாணம் அல்லது புனரமைப்பு மேற் கொள்ளல்.

(2) அரச சுகாதார நிறுவனங்களில் பொது சுகாதார சேவைகளை முறையாக பராமரிக்கத் தேவையான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை வழங்குதல். அத்தியாவசியமான உயிரி வைத்திய உபகரணங்களுக்கு தேவையான மேலதிக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல்.

(3) நோய் நிவாரணம் மற்றும் சிகிச்சை சேவைகளின் தரத்தை வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தல், சுகாதாரக் கல்வி கருவிகளை உருவாக்குதல்,

(4) குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்கள், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் பாடசாலைக் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நடத்துதல்.

(5) நோய் நிவாரணம் மற்றும் சிகிச்சை சேவைகளை வலுப்படுத்த தேவையான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் தொழிப்நுட்ட பயிற்சியை வழங்குதல்.

10. உள்நாட்டு வைத்தியம் என்ற விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) ஆயுர்வேத மருத்துவமனைகள், ஆயுர்வேத மத்திய மருந்தகங்கள், மருத்துவ மையங்கள், ஒரு நாள் சிகிச்சை மையங்கள், ஆயுர்வேத சிறப்பு சிகிச்சை மையங்கள், ஆயுர்வேத பஞ்சகர்ம மையங்கள், அதிகாரப்பூர்வ குடியிருப்புகள், உள்வாரி நுழைவாயில்கள், கழிவுநீர் வடிகால் அமைப்புகள் மற்றும் ஆயுர்வேத துறையுடன் தொடர்புடைய பிற உட்கட்டமைப்பு வசதிகளின் கட்டுமானம் அல்லது புனர்வாழ்வு நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்துதல்.

(2) அனைத்து ஆயுர்வேத சிகிச்சை நிறுவனங்களிலும் சுகாதார சேவைகளை முறையாகப் பராமரிக்கவும், மருந்து உற்பத்தி ஆலைகளில் மருந்து உற்பத்தி நடவடிக்கைகளைப் பராமரிக்கவும் தேவையான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை வழங்குதல்.

(3) நோய் நிவாரணம் மற்றும் சிகிச்சை சேவைகளின் தரத்தை வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் மற்றும் தரத்தினை அதிகரிப்பதற்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், சமூகத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல், குறைந்த வருமானம் பெறும் கர்ப்பிணிப் பெண்கள், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் பாடசாலை மாணவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நடத்துதல்.

(4) பாரம்பரிய மருத்துவ முறைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(5) மூலிகைத் தோட்டங்கள் மற்றும் மருந்துகளின் உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கைகளை எடுத்தல்.

11. நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை என்ற விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) நன்நடத்தைப் பொறுப்பில் உள்ள பிள்ளைகளின் நலன்புரி செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக விசேடநிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல் (தலைமைத்துவம், விளையாட்டு)

(2) நன்னடத்தைக்கு உட்பட்ட குழந்தைகளை சமூகமயமாக்கும் போது பிள்ளைகளுக்குத் தேவையான , தொழில் பயிற்சி உள்ளிட்ட அறிவு மற்றும் திறன்களை வளர்ப்பதற்குத் தேவையான திட்டங்களை செயல்படுத்துதல்.

(3) பிள்ளைகள் நன்நடத்தைக்குட்படுவதை தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். (சமூகம் மற்றும் குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வு, தேவைப்படும் குழந்தைகளுக்கு தொழில் பயிற்சி வழங்குதல் போன்றவை).

(4) நன்நடத்தை திணைக்களத்திற்கு உரிய கட்டடங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

(5) அநாதை, கைவிடப்பட்ட, உதவியற்ற மற்றும் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை வழங்குவதன் அவசியத்தை அறிய வேண்டிய ஊழியர்களின் குணம் மற்றும் செயற்திறனை மேம்படுத்த தேவையான தொழிலநுட்ப பயிற்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களை செயல்படுத்துதல். (எண்ணங்களில் அபிவிருத்தி உள்ளடங்கலாக)

(6) குழந்தைகள் இல்லப்படுத்தலை தடுத்து குடும்பத்திற்குள் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கமாகக் கொண்டு குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளின் பெற்றோர், பாதுகாவலர்கள் தொடங்கும் அல்லது தொடங்கிய சுயதொழிலுக்குத் தேவையான இயந்திரங்கள் அல்லது உபகரணங்களைப் பெறுவதற்கு, அரசின் பங்களிப்பை அதிகபட்சமாக இரண்டு இலட்சம் ரூபா (ரூ. 200,000) வரை உதவி வழங்குதல். (இந்த உதவி நிதி அடிப்படையில் வழங்கப்படக்கூடாது, ஆனால் பயனாளிக்குத் தேவையான இயந்திரங்கள் அல்லது உபகரணங்களை, நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் நடைமுறைகளைப் பின்பற்றி, திணைக்களத்தால் கொள்வனவு செய்து , பயனாளிக்கு வழங்க வேண்டும்.)

12. சமூக நலன்புரி என்ற விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள், வயதானவர்கள், அங்கவீனர்கள். அல்லது அநாதை காரணமாக சமூக சலுகைகளை இழந்த நபர்களின் நலன்புரி, ஆன்மீக வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாட்டிற்காக தேவையான ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்யலாம்.

(2) சமூக நலன்புரிச் செயற்பாட்டிற்கு முக்கியமான முறையாகப் பதிவு செய்யப்பட்ட அரசின் பதிவு செய்யப்பட்ட நலன்புரி மற்றும் மரண உதவிச் சங்கங்கள், கிராமப்புற முதியோர் குழுக்கள், பிரதேச முதியோர் சபைகள், மாவட்ட மற்றும் மாகாண முதியோர் இல்லங்களுக்காக , பொது நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய உபகரணங்களுக்காக அதிகபட்சமாக இரண்டு இலட்சம் ரூபா (ரூ. 200,000) வரை வழங்கப்படலாம்.

(i) அந்த உபகரணங்கள் பொது நல நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பொருட் பதிவேட்டில் முறையாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

(ii) பொருட்களை வழங்கும்போது பிரதேச செயலாளர் அல்லது சபையின் கூட்ட அதிகாரம் பெற்ற அதிகாரியின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(iii) மேற்கூறிய அளவுகோல்களின் கீழ் ஒரு தரப்பினர் பொருட்களைப் பெற தகுதி பெற்ற பின், மூன்று ஆண்டுகள்செல்லும் வரை இந்த விதியின் கீழ் வேறு எந்த ஏற்பாடுகளையும் பெற்றுக்கொள்ள இடமில்லை.

(3) பொருளாதார உருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஆரம்ப கட்டமாக, முதியோர் செயலகத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி நிறுவப்பட்ட முதியோர் சங்கங்கள் மற்றும் மன்றங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா (ரூ. 100,000) நிதி ஒதுக்கீடு வழங்கப்படலாம்.

(i) இந்த ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு முன்பு, ஒரு திட்ட அறிக்கையினை மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டும்.

(ii) குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக செயல்படுத்தக்கூடிய பொருளாதார உற்பத்தி திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் மேலும், திட்டத்தின் சிறப்பினைப் பொறுத்து, முதலாவது மானியத்தின் பின் பிந்திய ஆண்டுகளுக்காக பொருத்தமான முறையில் ஒதுக்கீடுகள் செய்யப்படலாம்.

(4) மேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திலோ அல்லது முதியோர் செயலகத்திலோ நிரந்தரப் பதிவுள்ள முதியோர் இல்லங்களில் அல்லது மேல் மாகாண சமூக சேவைத் திணைக்களத்தில் அல்லது மாற்றுத்திறனாளிகளுக்கான தலைமைச் செயலகத்தில் நிரந்தர பதிவுள்ள அங்கவீன இல்லங்கள், ஊனமுற்றோர் குடியிருப்பாளர்களின் மறுவாழ்வு மையங்களில் வசிப்பவர்களின் நலனுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதற்காக ஏற்பாடுகளைச் ஒதுக்கீடு செய்யலாம்.

(5) மேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திலோ அல்லது முதியோர் செயலகத்திலோ நிரந்தரப் பதிவுள்ள முதியோர் இல்லங்களில் அல்லது மேல் மாகாண சமூக சேவைத் திணைக்களத்தில் அல்லது மாற்றுத்திறனாளிகளுக்கான தலைமைச் செயலகத்தில் நிரந்தர பதிவுள்ள அங்கவீன இல்லங்கள், ஊனமுற்றோர் குடியிருப்பாளர்களின் மறுவாழ்வு மையங்களின் புதிய நிர்மாணம் அல்லது மறுசீரமைப்பு நடவடிக்கைக்காக உச்சமாக ஆறு இலட்சம் ரூபா (ரூ. 600,000) வரை ஒதுக்கீடுகள் செய்யப்படலாம்.

(i) இதற்காக, பிரதேச செயலாளரின் பரிந்துரையின் பேரில் தொழில்நுட்ப அதிகாரிகளின் மதிப்பீட்டின்படி, சம்பந்தப்பட்ட நிறுவனம் குறைந்தபட்சம் 10% பங்களிப்பைச் செய்யும் வகையில் ஏற்பாடுகள் வழங்கப்பட வேண்டும். (இந்த குறைந்தபட்ச பயனாளி பங்களிப்பு,பெற்றுக்கொள்வது மாகாண சபைக்கு உரித்தில்லாத தாபனத்திற்கு மட்டும் உரியதாகும்.)

(ii) ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒரு முறை மட்டுமே ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படுகின்றன, மேலும் 2 ஆண்டுகளுக்குப் பின், அந்த நோக்கத்திற்கு புறம்பான மற்றொரு நோக்கத்திற்காக ஏற்பாடுகள் வழங்கப்படலாம்

(6) முதியோர் இல்லங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான இல்லங்கள் மற்றும் மறுவாழ்வு மையங்களில் வசிப்பவர்களுக்கு அவர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை ஏற்பாடு செய்ய ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்யலாம்.

(7) பொது சமூகத்தில் வாழும் சிரேஷ்ட பிரஜைகளின் விசேட உதவி தேவைப்படும் சமூகம் மற்றும் கஸ்டப்பட்ட உதவி தேவைப்படும் சமூகத்தின் உடல், உள, பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தை மேம்படுத்துவதற்குத் தேவையான பல்வேறு திட்டங்களை ஒழுங்கமைத்து நடத்த ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்படலாம்.

(8) திணைக்களத்தின் மூலம் பேணப்படும் சிரேஷ்ட பிரஜைகளின் நலன் புரிமையங்கள், விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளின் வழிகாட்டல் நிலையங்கள், பதிவு செய்யப்பட்பட முதியோர் பராமரிப்பு மையங்கள் மானியம் பெறும் பாடசாலைகளின் கீழ் வராத சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளுக்கான பாடசாலைகளின் பௌதீக வசதிகளை மேம்படுத்துதல், அவர்களின் நல்வாழ்வுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல், உடல் மற்றும் உள வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றிற்கு ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்யலாம்.

(9) பணியாளர்களுக்கு பங்களிக்கக்கூடிய உதவி தேவைப்படும் சமூகத்தை மேம்படுத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்துதல், மற்றும் அதன் மூலம் அடையாளம் காணப்பட்ட சமூகத்திற்காக தேவையான நிதி மற்றும் பொருள் வசதிகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்யலாம்.

(10) மேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில், முதியோர் செயலகத்தில் அல்லது அங்கவீன நபர்களுக்கான செயலகத்தில் நிரந்தரப் பதிவோடு பராமரிக்கப்படும் அனைத்து வசிப்பிட நிறுவனங்கள் மற்றும் பகல் நேர நிலையங்களின் ஊழியர்களின் தரம் மற்றும் செயல்திறனை மேம்படுத்த தொழில்நுட்ப பயிற்சி மற்றும் அவர்களின் உளவியல் மேம்பாட்டிற்காக தேவையான பல்வேறு திட்டங்களை ஏற்பாடு செய்ய ஒதுக்கீடுகளை ஒதுக்கலாம்.

(11) மானியம் பெறும் பாடசாலைகளின் கீழ் வரும் சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு கல்வி வசதிகளை வழங்கும் பாடசாலைகளுக்கு , கல்வி அமைச்சின் முன் அனுமதி மற்றும் ஒப்புதலுடன் இருமுறை இல்லை என்று உறுதிப்படுத்தலைப் பெற்ற பின் பிள்ளைகளின் கல்விக்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு ஏற்பாடுகளை ஒதுக்க இயலும்.

(12) குறைந்த வருமானம் கொண்ட மாற்றுத்திறனாளிகள், தாய்வழி குடும்பங்கள் மற்றும் திணைக்களத்திடமிருந்து மருத்துவ உதவி பெறும் நபர்கள் வசிக்கும் வீடுகளில் அவர்களுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துவதற்காக மாகாண சமூக சேவை அதிகாரி மற்றும் சம்பந்தப்பட்ட பிரிவின் பிரதேச செயலாளரின் பரிந்துரையின் பேரில் அதிகபட்சமாக மூன்று இலட்சம் ரூபா (ரூ. 300,000) வரை ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த நிதியை , பயனாளிகளிடமிருந்து 3 தவணைகளில் தொகையைப் பெறும் வகையில் ஏற்பாடுகளைச் செய்யலாம்.

(13) விசேட தேவைகளைக் கொண்ட குறைந்த வருமானக் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலையில் படிக்கும் குழந்தைகளுக்கு, மருத்துவ பரிந்துரை மற்றும் மாகாண சமூக சேவைகள் பணிப்பாளரின் ஒப்புதலுடன், அவர்களின் அன்றாட வாழ்க்கையை எளிதாக்கும் சிறப்பு கல்வி உபகரணங்கள் அல்லது விசேட உபகரணங்களை வழங்கலாம்.

(14) முதியவர்கள் மற்றும் சிறப்புத் தேவைகள் உள்ள நபர்கள் குடியிருப்பு நிறுவனங்களில் அவர்களின் திறன்களுக்கு ஏற்ப சுயதொழில் திட்டங்களை செயல்படுத்த எதிர்பார்க்கப்பட்டால், அந்த நோக்கத்திற்கு தேவையான அடிப்படை அறிவு மற்றும் அடிப்படை வளங்களை பெறுவதற்காக அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபா (ரூ. 100,000) வரையிலான தொகைக்கு ஏற்பாடுகள் வழங்கப்படலாம்.

13. மகளிர் விவகாரம் என்ற விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) சுயதொழிலில் ஈடுபடும் அல்லது ஈடுபட எதிர்பார்க்கும் குறைந்த வருமானம்பெறும் பெண்களுக்கு 30 % ஆன ஆக்க குறைந்த பயனாளிகளின் பங்களிப்பின் கீழ் அரச பங்களிப்பில் ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் (150,000) என்ற உச்சமான எல்லையின் கீழ் மூலதன ஏற்பாடுகளை வழங்குதல்.

(2) பெண்களுக்கு சுயதொழில் பயிற்சித் திட்டங்களை நடத்துதல் மற்றும் அவர்கள் மூலம் சுயதொழில் தொடங்கிய பெண்களுக்கு மூலதன உபகரணங்களை வழங்குவதற்காக குறைந்தபட்ச பயனாளி பங்களிப்பு 30% உடன் மூலதன உபகரணங்களை வழங்குவதற்காக அரச பங்களிப்பு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் (150,000) ரூபாவுக்கு உட்பட்ட மூலதன ஒதுக்கீடுகளை வழங்குதல்.

(3) தேசிய தொழில் திறன் சான்றிதழ்களைப் பெறுவதற்கு தொடர்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பி அதற்கான செலவுக்காக அதிகபட்சமாக ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 50,000) வழங்குதல். பயனாளியுடன் முறையான ஒப்பந்தம் செய்தபின், இந்தத் தொகை நேரடியாக தொடர்புடைய தொழிற்பயிற்சி நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டும்.

(4) கஸ்டப்பட்ட பெண்களின் (விதவைகள், கணவன் கைவிட்டுச்சென்றவர்கள், ஊனமுற்றோர்) வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை அடையாளம் கண்டு, அதிகபட்சமாக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் (ரூ.150,000) ரூபா அரச பங்களிப்புக்கு உட்பட்டு மூலதன உபகரணங்களை வழங்குதல்.

(5) பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சூழல்களில் முக்கியத்துவம் பெற ஆளுமை மேம்பாடு மற்றும் தலைமைத்துவ பட்டறைகளை நடத்துதல்.

(6) பெண்கள் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். மற்றும் தொழில்முனைவோர் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.

(7) பெண்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்த தேவையான திட்டங்களை செயல்படுத்துதல்.

14. காணி விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) அரச காணிகளின் பாதுகாப்பு தொடர்பான மண் பாதுகாப்புப் பணிகள் உட்பட தேவையான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வது.

(2) அரசின் காணி முகாமைத்துவம் தொடர்பான நிறுவனங்களை வலுப்படுத்த தேவையான வசதிகளை வழங்குதல்.

(3) அரச காணிகளுக்கு பிரவேசிப்பதற்கு தேவையான வீதி வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

15. விவசாய விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) மாகாணத்தில் விவசாயத் தொழிலுக்குரிய தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு உள்ளீடுகளை வழங்குவது அவசியமானால், அரசின் அதிகபட்சமான பத்து இலட்சம் ரூபா (ரூ. 1,000,000) பங்களிப்பை வழங்குதல். இதன் கீழ், புதிய தொழில்முனைவோர் மேம்பாடு அல்லது நிறுவப்பட்ட தொழில்முனைவோரை மேலும் மேம்பாடு செய்யலாம்.

(i) பயனாளியின் பங்களிப்பு முழு திட்ட மதிப்பில் குறைந்தது 30% ஆக இருக்க வேண்டும் மற்றும் ஒரு பயனாளிக்கு ஒரு முறை மட்டுமே வாய்ப்பு வழங்கப்படும்.

(ii) முதல் பலாபலன் வழங்கிய சந்தர்ப்பத்திலிருந்து 5 ஆண்டுகளுக்குள், ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது பல சந்தர்ப்பங்களில் மொத்தம் பத்து இலட்சம் ரூபா (ரூ. 1,000,000) வரை, பலாபலன்களை வழங்கலாம்.

(2) மாகாணத்தில் விவசாயம் தொடர்பான தொழில்முனைவோர் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களுக்கு (விவசாய நவீனமயமாக்கம், காலநிலைக்கு ஏற்ற விவசாயத் திட்டங்கள், ஏற்றுமதி சார்ந்த விவசாயத் திட்டங்கள் போன்றவை) தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு உள்ளீடுகளை வழங்குவது அவசியமானால். ஒரு தொழில்நுட்பக் குழுவின் (இந்தக் குழு தொழில்நுட்பம் தொடர்பான அதிகாரிகளுக்கு மேலதிகமாக, அமைச்சின் பிரதிநிதித்துவமும் இருக்க வேண்டும்) மூலம் ஒதுக்கீட்டின் தேவையையும் ஒதுக்கீட்டை விடுவிக்கும் முறையையும் தீர்மானிக்கப்பட்டு அதன் மூலம் வழங்கப்படும் முடிவைப் பரிசீலித்து மேல் மாகாண விவசாய பணிப்பாளரால் வழங்கப்பட்ட பரிந்துரையின்படி, மேல் மாகாண விவசாய அமைச்சின் செயலாளரின் ஒப்புதலின் கீழ் அதிகபட்சமாக பதினைந்து இலட்சம் ரூபா (ரூ. 1,500,000) ஏற்பாடு வழங்கப்படலாம், அங்கு

(i) பயனாளியின் பங்களிப்பு முழு திட்ட மதிப்பில் குறைந்தது 30% ஆக இருக்க வேண்டும்.

(ii) இந்த சலுகையை ஒரு தொழில்முனைவோருக்கு ஒரு முறை மட்டுமே வழங்குவது.

(iii) ஒரு மாவட்டத்திற்கு செயல்படுத்தக்கூடிய இந்த வகை திட்டங்களின் அதிகபட்ச எண்ணிக்கை ஆண்டுக்கு இரண்டு ஆகும்.

(3) தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு அளவிலான விவசாய நிறுவன மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிக்கும் திட்டங்களுக்கு விவசாய உபகரணங்கள் அல்லது பிற சலுகைகளை வழங்குதல், முழு திட்ட மதிப்பில் குறைந்தபட்ச பயனாளி பங்களிப்பு 30% ஆகுமாறும் மற்றும் அரசாங்க பங்களிப்பு ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாவுக்கு (ரூ. 100,000.00) உட்பட்டு விவசாய உபகரணங்கள் அல்லது பிற பலாபலன்களை வழங்குதல்.

(i) ஒரு முறை சலுகைகள் வழங்கப்பட்ட பின் , மீண்டும் சலுகைகளைப் பெற தகுதி பெறுவதற்கு குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும்.

(4) மாகாணத்தில் விவசாயம் தொடர்பான திட்டங்களை செயல்படுத்துவதில் பதிவுசெய்யப்பட்ட விவசாய அமைப்புகளுக்கு சலுகைகளை வழங்குவது அவசியமானால், திட்டத்திற்கு விவசாயிகள் அமைப்பின் பங்களிப்பு திட்டத்தின் மொத்த மதிப்பில் குறைந்தபட்சம் 30% ஆகுமாறு அரசின் பங்களிப்பு அதிகபட்ச ஐந்துஇலட்சம் ரூபா (ரூ. 500,000) ஆகுமாறு விவசாய உபகரணங்கள்.அத்துடன்/அல்லது பிற சலுகைகள் வழங்கப்படலாம்.

(i) இந்தப் பலன்களைப் பெறத் தகுதி பெற, விவசாய அமைப்பு பதிவு செய்யப்பட்டதிலிருந்து குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் கடந்திருக்க வேண்டும்.

(ii) ஒரு முறை சலுகைகள் வழங்கப்பட்ட பின் , மீண்டும் சலுகைகளைப் பெற தகுதி பெறுவதற்கு குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும்.

(5) உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான திட்டங்களை செயல்படுத்துதல்.

(i) விவசாய உற்பத்தியை அதிகரிக்க சாகுபடி பரப்பளவையும் உற்பத்தி உற்பத்தித்திறனையும் அதிகரித்தல்.

(ii) உற்பத்திச் செலவுகளைக் குறைக்கக்கூடிய திட்டங்களைத் தயாரித்தல்.

(iii) சந்தை வசதிகளை மேற்கொள்ள திட்டங்களை நடைமுறைப் படுத்துதல்.

(iv) பெறுமதி கூட்டப்பட்ட தயாரிப்புகள் மேற்கொள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(v) வீட்டுத் தோட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(6) உயர்தர காய்கறிகள், பழங்கள் போன்றவற்றின் நுகர்வை உறுதி செய்வதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

(i) சேதன உரங்களின் பயன்பாடு மற்றும் உர உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்ட முன்மொழிவுகளை செயல்படுத்துதல்.

(ii) நல்ல விவசாய நடைமுறைகளைச் செயல்படுத்தத் தேவையான திட்டங்களைச் செயல்படுத்துதல்

(iii) GAP சான்றிதழுக்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

(iv) இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

(7) மேல் மாகாணத்தில் விதைகள் மற்றும் நடுகை பொருட்களின் கிடைக்கும் தன்மையை அதிகரிப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

(i) திட்டங்கள் மூலம் விதைகள் மற்றும் நடுவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களை எதிர்வரும் போகங்களில் வழங்குநர்களாக அடையாளம் கண்டு அவர்களின் பொருட்கள் தேவைப்படும்போது மாகாண விவசாயத் திணைக்களத்தின் திட்டத்திற்காக கொள்வனவு செய்ய மாகாண விவசாயத் திணைக்களத்தில் வழங்குநர்களாக அவர்களை அடையாளம் காண நடவடிக்கை எடுப்பது.

(ii) விதைகள் மற்றும் நடுவுப் பொருட்களை விற்பனை செய்வதற்கு பொருத்தமான திட்டங்களை செயல்படுத்துதல்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் திட்டங்களில் வழங்கப்படும் விதைகளின் அளவு போகத்தின் இறுதியில் சேகரிக்கப்பட்டு, அடுத்த போகத்தில் பிற பயனாளிகளுக்கு வழங்கும் ஒரு வழிமுறையை செயல்படுத்த திட்டங்களை செயல்படுத்த இயலும்.

(8) விவசாய விரிவாக்கத்திற்கான பயிற்சி வழங்குவதற்காக திட்டங்களை செயல்படுத்துதல்.

(i) விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அல்லது விவசாயத் துறையில் நுழைய ஆர்வமுள்ள எவருக்கும் தொழில்நுட்ப அறிவை வழங்க பயிற்சித் திட்டங்களை ஒழுங்கமைத்து செயல்படுத்துதல்.

(ii) உள்ளூர் கள ஆய்வுகள் மற்றும் விவசாய நிறுவனங்களுக்கான ஆய்வு சுற்றுப்பயணங்கள் மூலம் விவசாயிகளுக்கு விவசாய தொழில்நுட்பத்தை வழங்குவதற்கான திட்டங்களை செயல்படுத்தலாம், மேலும் விரிவாக்க நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு (இலங்கை விவசாய சேவை அதிகாரிகள், விவசாய ஆலோசகர்கள், விவசாய செயல்பாட்டு அதிகாரிகள், தொழில்நுட்ப உதவியாளர்கள்) அவற்றில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படலாம். ஒரு மாவட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு அதிகபட்சம் இரண்டு இதுபோன்ற திட்டங்கள் மட்டுமே செயல்படுத்தப்பட வேண்டும்.

(iii) பல்வேறு விரிவாக்க முறைகளைப் பயன்படுத்தி விவசாயிகள் உள்ளடங்கலாக இந்த விடயத்தில் ஆர்வமுள்ள அனைவருக்கும் தேவையான அறிவு, திறன்கள் மற்றும் திறமையை வழங்க நடவடிக்கை எடுத்தல். (நடமாடும் திட்டங்கள், பயிர் சிகிச்சைகள், கண்காட்சிகள், கள நாள் பயிற்சித் திட்டங்கள், வெளியீடுகள், FFS, FBS, வெகுஜன ஊடகங்கள் - தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள், சிறப்புப் பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவை)

(iv) விவசாய தொழில்நுட்பத்தை கள அளவில் பிரசாரம் செய்வதற்கு ஏற்ற முறையில் பயிர் சாகுபடி மற்றும் செயல்விளக்கங்கள் பராமரிப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

(v) பாடசாலைகள், வீடுகள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் தொடர்புபட்ட முறையில் வீட்டுத் தோட்டக்கலையை ஊக்குவிப்பதற்கான பயிற்சித் திட்டங்களை நடத்துதல் மற்றும் தேவைப்படும் போது உள்ளீடுகளை வழங்குதல்.

(vi) சிறப்பான விரிவாக்கத் திட்டங்களை மதிப்பிடுவதற்காக வருடாந்த மாநாடுகளை (சிறந்த தோட்டம்/சிறந்த விவசாய தொழில்முனைவோர் போன்றவை) நடத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

(9) மாகாண விவசாயத் திணைக்களத்திற்குரிய நிறுவனங்களின் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளை செயல்படுத்துதல்.

(i) விவசாய தொழில்நுட்பம் பொதுமக்களுக்கு விரிவுபெறும் வகையில், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் இடவசதிகளுடனான விரிவாக்க அலுவலகங்களில் பயிர் சாகுபடி மற்றும் ஒருங்கிணைந்த பண்ணை அமைப்பை மாதிரி மட்டத்தில் செயல்படுத்துதல்.

(ii) திணைக்களத்தின் கீழ் உள்ள பண்ணைகள்/ஒருங்கிணைந்த பண்ணை அமைப்புக்களில் உணவுப் பாதுகாப்புக்குரிய திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் வருமானம் ஈட்டும் திட்டங்களை செயல்படுத்துதல்.

(iii) விரிவாக்க முகவர்கள்/களப் பணியாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்துதல்.

(iv) வருமானம் ஈட்டுவதற்காக பூச்செய்கை , கால்நடை வளர்ப்பு, பல்வேறு கலைப் படைப்புகள் (போன்சாய் கலை, டெர்ரேரியம்கள், கோகிடாக்கள் போன்றவை) போன்ற திட்டங்களை செயல்படுத்துதல்.

(10) மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு உரிய நிறுவனங்களின் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் திட்ட முன்மொழிவுகளை செயல்படுத்துதல்.

(i) கட்டடங்களின் கட்டுமானம் மற்றும் மேம்பாடு செய்தல்
(ii) காணி அபிவிருத்தி
(iii) பண்ணை நடவடிக்கை மேம்பாடு
(iv) பயிற்சி திறன் மேம்பாடு
(v) இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல்

(11) மாகாண ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்பான அடையாளம் காணப்பட்ட திட்டங்களை திட்டமிடல் குழுவிடம் சமர்ப்பித்தல், ஒப்புதல் பெறுதல் மற்றும் அவற்றை செயல்படுத்துதல்.

(i) அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயத் துறைகள் ஈடுபடுத்தப்பட்டால் மற்றும் அந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய செலவுகளை அரசாங்கமே செய்ய வேண்டியிருந்தால், அரசாங்க பங்களிப்பு அதிகபட்சமாக பதினைந்து இலட்சம் ரூபா (ரூ. 1,500,000) வரை ஏற்பாடு வழங்குவது இடம் பெறலாம்.

(ii) முதலாவது பலாபலன் வழங்கிய சந்தர்ப்பத்திலிருந்து 5 ஆண்டுகளுக்குள், ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது பல சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா பதினைந்து இலட்சம் (ரூ. 1,500,000) வரை, ஏற்பாடுகள் வழங்கப்படலாம்.

(iii) ஒரு மாவட்டத்திற்கு செயல்படுத்தக்கூடிய அத்தகைய திட்டங்களின் அதிகபட்ச எண்ணிக்கை வருடத்திற்கு ஒன்று ஆகும்.

(12) மாகாண சபைகளுக்குரியதாக மாகாண சபை அதிகாரிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி விவசாய சட்ட திட்டங்கள் மற்றும் அவற்றை செயல்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

(13) மதிப்புச் சங்கிலி மேம்பாடு, பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகள் மற்றும் அவற்றுக்கான சந்தை வசதிகளை வழங்க தேவையான திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல்,

(14) விவசாய வணிகம் மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கும் அறுவடைக்குப் பின்னரான இழப்புகளைக் குறைப்பதற்கும் திட்டங்களை செயல்படுத்துதல்

(15) இளைஞர்களை விவசாயத் தொழிலை நோக்கி வழிநடத்தும் திட்டங்களை செயல்படுத்துதல்.

(16) சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளப்படாத பொருத்தமான நிலங்களை உற்பத்தித் திறன் மிக்க சாகுபடி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கு பொருத்தமான திட்டங்களை செயல்படுத்துதல், பண்ணைகள் மற்றும் விவசாய நிலங்களின் மேம்பாடு தொடர்பான திட்டங்களை செயல்படுத்துதல்.

(17) மேல் மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஹெல போஜுன் எண்ணக்கருவை செயல்படுத்துவது தொடர்பான திட்டங்களை செயல்படுத்துதல்.

(18) விவசாயக் தொழில்/உணவுப் பாதுகாப்பை அச்சுறுத்தும் தொற்றுநோய்கள், நோய்கள், பூச்சிகள், வெள்ளம் போன்ற பேரழிவுகள் ஏற்படும் போது விவசாயத் திணைக்களத்தின் மூலம் உரிய முறையில் பொருத்தமான திட்டங்களைச் செயல்படுத்தும்.

(19) தேவைப்படும் சந்தர்ப்பங்களில், பொது மற்றும் தனியார் துறைகளின் ஒத்துளைப்புடன் மேற்கொள்ளப்படும் பொது தனியார் கூட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல்.

(20) காலநிலை தாக்கங்களைக் குறைப்பதற்காக மற்றும் அவற்றுக்கு தகவமைத்துக் கொள்வதற்கும் தேவையான காலநிலைக்கு ஏற்ற திட்டங்களை செயல்படுத்துதல்.

(21) விவசாய சேவைகள் அதிகாரசபை தொடர்பான விடத்து,

(i) விவசாய பயிர் விற்பனையை மேம்படுத்துவதற்காக உரிய திட்ட முன்மொழிவுகளை செயல்படுத்துதல்.

(ii) பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகள் மற்றும் சந்தை வசதிகளை வழங்குவதற்குத் தேவையான திட்ட முன்மொழிவுகளை செயல்படுத்துதல்.

(iii) விவசாய வணிகம் மற்றும் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

(iv) ஹெல போஜுன் எண்ணக்கருவை நடைமுறைப்படுத்த தேவையான அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்துதல்.

(v) அறுவடைக்குப் பின்னரான இழப்புகளைக் குறைக்க திட்டங்களைச் செயல்படுத்துதல்.

(vi) தொழில்முனைவோரால் சேதன உற்பத்திகளின் விற்பனை செய்வதற்கான சந்தைகளை அறிமுகப்படுத்துதல், வர்த்தக மையங்களை நிறுவுதல் மற்றும் அந்த மையங்களின் மேம்பாட்டிற்கான திட்ட முன்மொழிவுகளை செயல்படுத்துதல்.

(vii) நடமாடும் சந்தைகள் மற்றும் கண்காட்சிகளை நடத்துவதில் பங்களிப்பு செய்தல்.

(viii) சுயதொழிலில் ஈடுபட சமூகத்தை ஊக்குவித்தல் மற்றும் அவர்களின் வியாபாரங்களைப் பராமரிப்பதற்கு பங்களிக்கும் திட்டங்களை செயல்படுத்துதல்.

(ix) மாகாண விவசாய அதிகாரசபைக்கு வருமானத்தை ஈட்டக்கூடிய முறையில் விவசாயத் துறை தொடர்பான திட்டங்களை செயல்படுத்துதல்.

(x) உள்ளீடுகள் கிடைப்பதை இலகுபடுத்தவும் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் திட்டங்களை செயல்படுத்துதல்

16. நீர்ப்பாசன விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விவசாய நிலங்களுக்கு நீர் வசதிகளை வழங்கும்போது விவசாய நிலம் வரை நீரைக் கொண்டு செல்வதற்கான வசதிகளை மேம்படுத்துதல்,மேலதிகமான நீரை வெளியேற்றுதல் மற்றும் வெள்ளம் மூலம் மற்றும் உப்பு நீரால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கும் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல்.

(2) ஏற்கனவே உள்ள மற்றும் புதிய நீர்ப்பாசன முறைகளைப் பராமரித்தல்/மேம்படுத்துதல் மற்றும் புதிய நீர்ப்பாசன முறைகளை நிர்மாணித்தல்.

(3) நீர் முகாமைத்துவம் தொடர்பாக விவசாயிகளை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.

(4) சிறு நீர்ப்பாசனம் தொடர்பான கட்டுமானம் அல்லது புதுப்பித்தல் பணிகளுக்காக நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படும் நீர்ப்பாசனம் அல்லது பிற கூறுகளுக்கான திட்ட முன்மொழிவுகளை செயல்படுத்துதல்.

(5) விவசாய நிலங்களுக்கு பிரவேசிப்பதற்கு தேவையான விவசாய வீதிகள் மற்றும் உழவியந்திர சாய்வுப் பாதைகளை அமைத்தல்.

(6) நீர்ப்பாசன கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தொடர்பான இயந்திர உபகரணங்களின் கொள்வனவு மற்றும் தொடர்ச்சியான சேவை விநியோகத்தை பராமரித்தல்.

17. கடற்றொழில் விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) மாகாண மக்களின் ஊட்டச்சத்து குறைபாடுகளைக் குறைப்பதற்கும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், மீன் உற்பத்தியை இலகுவாக்கவும் மாகாணத்தின் நன்னீர் நீர்த்தேக்கங்களில் தேவையான மீன் குஞ்சுகளை விடுதல், நன்னீர் மற்றும் சிறிய அளவிலான கடல் நீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு மீன்பிடி சாதனங்கள் மற்றும் உபகரணங்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பயனாளி பங்களிப்பு 30% இன் கீழ் அதிகபட்சமாக ஒருஇலட்சம் ரூபா (ரூ. 100,000) வரை வழங்குதல். மற்றும் மீன்வளர்ப்பு மேம்பாட்டு அதிகாரசபை அல்லது மீன்வள அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட மீனவ சங்கங்களுக்கு நேரடி மானியங்களாக உள்ளீடுகளை வழங்கும்போது, தொழில்நுட்பக் குழு (இந்த தொழில்நுட்பக் குழுவில் விடயத்தில் நிபுணத்துவத்திற்குமேலதிகமாக , விவசாய அமைச்சின் ஒரு அதிகாரியும் சேர்க்கப்பட வேண்டும்) பரிந்துரைகளின்படி, பயனாளி பங்களிப்பு 30% ஆக இருக்கும் படி , அதிகபட்சம் ரூபா ஐந்துஇலட்சம் (ரூ. 500,000) வரை வழங்குதல்.

(2) அலங்கார மீன் கைத்தொழிலை மேம்படுத்துவது தொடர்பான திட்டங்களை செயல்படுத்துவதில் 03 வருடங்களுக்கும் ஒரு முறை 30% பயனாளி பங்களிப்பின் கீழ் அதிகபட்சமாக ஒருஇலட்சம் ரூபா (ரூ. 100,000) வரை பலாபலன்களை வழங்குதல்.

(3) மீனவர் சமூகத்திற்கு சேவைகளை திறம்பட வழங்குவதற்காக அதிகாரிகளின் அறிவு மற்றும் மனப்பான்மையை வளர்ப்பதற்குத் தேவையான பயிற்சித் திட்டங்களை நடத்துதல் மற்றும் பண்ணைகளுக்கு புதிய தொழில்நுட்பத்தை வழங்குதல் மற்றும் மீன் விவசாயிகளுக்கு அந்த தொழில்நுட்பத்தைப் பரிமாறுவதற்கு பயிற்சித் திட்டங்கள், கள நாட்கள் மற்றும் களப் பயணங்களை நடத்துதல்.

(4) பிட்டிபன மீன்வளர்ப்பு மேம்பாட்டு மையங்களை அபிவிருத்தி செய்து பேணிச் செல்லுதல்.

18. கால்நடை உற்பத்தி விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்

(1) பொதுமக்களுக்கு தரமான விலங்கு உற்பத்திப் பொருட்களை வழங்குவதற்காக இந்தத் துறைகளின் மேம்பாட்டிற்காக முன்மொழியப்பட்ட திட்டங்களை செயல்படுத்துதல்

(2) கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகளின் பண்ணைகளில் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம், அவர்களின் வருமானத்தை அதிகரிக்க, பண்ணை விலங்குகளின் இனத்தை மேம்படுத்துவதன் அடிப்படையில் இனப்பெருக்க விலங்குகள் மற்றும் இனப்பெருக்கப் பொருட்களை வழங்குதல்,

(i) தற்போது கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள ஒரு விவசாயிக்கு, விவசாயி தயாரித்த மாட்டுத் தொழுவத்தில் வழங்கப்படும் பசுக்கள்/ஆடுகளுக்கு உணவு வழங்குவதன் மூலம் பராமரிக்க முடியும் என்பதை ஒரு தொழில்நுட்பக் குழு உறுதிப்படுத்தும் போது. பால் உற்பத்தி செய்து சந்தைக்கு வெளியிடும் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக இரண்டு பசுக்கள்/வயது வந்த பசுக்களைப் (ஒரு வயதுக்கு மேற்பட்டவை) கொள்வனவு செய்ய , தொழில்நுட்பக் குழுவின் மதிப்பிடப்பட்டபடி, அரசின் உச்சமான பங்களிப்புடன் 70% ஆகுமாறு ஐந்துஇலட்சம் ரூபா (ரூ. 500,000) செலுத்துதல்.

(ii) சுயதொழில் செய்பவர்களாக இந்தத் துறையில் புதிதாக நுழையும் பயனாளிகளுக்கு, விவசாயி தயாரித்த மாட்டு கொட்டில்களுடன் வழங்கப்படும் பசுக்கள்/ஆடுகளுக்கு உணவு வழங்குவதன் மூலம் பராமரிக்க முடியும் என்பதை ஒரு தொழில்நுட்பக் குழு உறுதி செய்யும் போது ஒரு பசுவை கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்பக் குழுவால் மதிப்பிடப்பட்டபடி 70% அரசாங்க பங்களிப்புடன் அதிகபட்சமாக இரண்டுஇலட்சம்

ரூபா (ரூ. 200,000) செலுத்துதல். விவசாயின் பங்களிப்பாக தொழில்நுட்பக் குழுவால் மதிப்பிடப்பட்ட பிறகு புதிதாக கட்டப்படும் மாட்டுத் தொழுவத்தை பயன்படுத்தலாம்.

(iii) தற்போது ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்களுக்கு பண்ணையாளர் தயாரித்த ஒரு காலையில் உள்ள ஆடுகள்/பெண் ஆடுகளுக்கு உணவு வழங்கி பராமரிக்க முடியும் என்பதை ஒரு தொழில்நுட்பக் குழு உறுதிப்படுத்தும் போது மற்றும் பால் உற்பத்தி செய்யும்/இறைச்சிக்காக விலங்குகளை சந்தைப்படுத்தும் பண்ணையாளருக்கு 2 முதல் 5 ஆடுகள் வரை கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்பக் குழுவால் மதிப்பிடப்பட்ட விலங்குகளின் மதிப்பில் 70% அரசாங்க பங்களிப்பில் அதிகபட்சமாக இரண்டுஇலட்சம் ரூபா (ரூ. 200,000) வரை.செலுத்துதல் ஒரு ஆட்டுப்பட்டியை கொள்வனவு செய்ய , தொழில்நுட்பக் குழுவால் மதிப்பிடப்பட்ட விலங்கின் மதிப்பில் 70% ஆன நிதி , அதிகபட்சமாக இரண்டுஇலட்சம் ரூபா (ரூ. 200,000) இன் கீழ் வழங்குதல்.

(iv) சுயதொழில் செய்பவர்களாக இந்தத் துறையில் புதிதாக நுழையும் பயனாளிகளுக்கு, பண்ணையாளரால் தயாரிக்கப்பட்ட ஆட்டுக்காலைகளுடன் வழங்கப்படும் ஆடுகள்/பெண் ஆடுகளுக்கு உணவு வழங்கி பராமரிக்க முடியும் என்பதை தொழில்நுட்பக் குழு உறுதி செய்யும் போது, விலங்குகளை கொள்வனவு செய்ய தொழில்நுட்பக் குழுவால் மதிப்பிடப்பட்ட விலங்குகளின் மதிப்பில் 70% அரசாங்க பங்களிப்பு, அதிகபட்சமாக இரண்டரை இலட்சம் ரூபா (ரூ. 250,000) வரை விலங்குகளை வாங்குவதற்கு வழங்கப்படும். தொழில்நுட்பக் குழு புதிதாக கட்டப்பட்ட ஆட்டுக் காலையை விவசாயியின் பங்களிப்பாக மதிப்பிடப்பட்ட பிறகு, பயன்படுத்தலாம்.

(v) தொழில்நுட்பக் குழுவால் மதிப்பிடப்பட்டபடி, தற்போது பன்றி வளப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயி தயாரித்த பண்ணையுடன் வழங்கப்படும் பன்றிகளைப் பராமரிக்கவும் உணவளிக்கவும் முடியும் என்பதை தொழில்நுட்பக் குழு உறுதி செய்யும் போது, ஒரு விவசாயிக்கு. அதிகபட்சமாக 5 பன்றிக்குட்டிகளை வாங்குவதற்கு, தொழிநுட்பக் குழுவின் மதிப்பீட்டிற்கு இணங் கால்நடைகளின் மதிப்பில் அதிகபட்சமாக 70% அரசாங்க பங்களிப்பாக, ரூபா இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் என்ற (ரூ. 250,000) உச்ச அளவின் கீழ் செலுத்துதல்

(vi) சுயதொழில் செய்பவர்களாக புதிதாக பன்றி வளர்ப்புத் தொழிலில் நுழையும் பயனாளிகளுக்கு, பண்ணையாளர் தயாரித்த கூடு மூலம் வழங்கப்படும் விலங்குகளுக்கு உணவு வழங்குவதன் மூலம் பராமரிக்க முடியும் என்பதை தொழில்நுட்பக் குழு உறுதி செய்யும் போது, விலங்குளை கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்பக் குழுவால் மதிப்பிடப்பட்ட விலங்குகளின் மதிப்பில் 70% அரசாங்க பங்களிப்பு, ரூபா இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் (ரூ. 250,000) என்ற உச்ச அளவின் கீழ் வழங்குதல். தொழில்நுட்பக் குழு புதிதாக கட்டப்பட்ட பன்றி கூட்டினை விவசாயியின் பங்களிப்பாகப் மதிப்பிடப்பட்ட பிறகு, பயன்படுத்தலாம்.

(vii) இயற்கையாக பால் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படும் இனப்பெருக்க நிலை பசுக்கள் 5 இற்கு மேல் உள்ள பண்ணைக்கு இயற்கை இனப்பெருக்க நோக்கங்களுக்காக ஒரு கன்றுக்குட்டியைப் பெறுவதற்கு, தொழில்நுட்பக் குழுவால் மதிப்பிடப்பட்டபடி, விலங்குகளின் மதிப்பில் 70% அரசாங்க பங்களிப்பாக, அதிகபட்சம் ரூபா இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் (ரூ. 250,000) இன் கீழ் செலுத்துதல்.

(3) கால்நடைப் பண்ணைகள்/பால் பண்ணையாளர் சங்கங்கள்/கால்நடை உற்பத்தி நிறுவனங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும்போது பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(i) பால் பண்ணைகள் சங்கங்கள்/கால்நடை உற்பத்தி நிறுவனங்களுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில், தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், மதிப்பிடப்பட்ட செலவில் 70% அரசாங்க பங்களிப்பாக, உச்சமாக ரூபா ஐந்துஇலட்சம் (ரூ. 500,000) வரை வழங்கப்படலாம்.

(4) மக்களின் வீட்டு அலகுகளில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, மேற்கொள்ளப்படும் வீட்டுக் கோழி வளர்ப்புத் திட்டம், மாற்றுக் கோழி வளர்ப்புக்குத் தேவையான விலங்குகளை (காடைகள், வான்கோழிகள், வாத்துகள்) வழங்குவதில், கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் மற்றும் கால்நடை அலுவலரின் பரிந்துரையின் பேரில், ஒவ்வொரு வீட்டு அலகிற்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 10-20 கோழிக் குஞ்சுகள் மற்றும் 25 -100 வான்கோழிகள் மற்றும் காடைகளை வழங்குதல். பயனாளி தானே தயாரித்த கூண்டு வைத்திருப்பது கட்டாயமாகும், இது கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் மற்றும் கால்நடை அதிகாரியின் பரிந்துரையின் அடிப்படையில் பயனாளியின் பங்களிப்புக்கு ஈடுசெய்யப்படலாம்.

(5) தரமான மக்கள் சேவைகளை வழங்க திணைக்களத்திற்குரிய நிறுவனங்களுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துதல்.

19. கைத்தொழில் விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல்வேறு தொழில்களை உள்ளடங்குமாறு உள்ளூர் பாரம்பரிய தொழில்கள் (ஜவுளி, மரம், களிமண், தோல், மட்பாண்டங்கள், தும்பு, தையல்) மற்றும் பிற தொழில்களை ஊக்குவித்தல் மற்றும் அந்த பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதற்கு ஏற்றமுறையில்,

(1) உறுதியாக அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்குத் தேவையான உள்ளீடுகள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு சிறு தொழில்துறை சங்கங்களுக்கு உதவி வழங்கப்படலாம். இங்கே, பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்;

(i) அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட இயங்கும் சிறு கைத்தொழில் சங்கமாக இருக்க வேண்டும்.

(ii) வழங்கப்படும் உள்ளீடுகள்/தொழில்நுட்ப உபகரணங்களின் மதிப்பில் 30% ஐ சம்பந்தப்பட்ட சங்கம் பங்களிக்க வேண்டும், மேலும் ஒரு சங்கத்திற்கு ஒரு வருடத்தில் அரசாங்க உதவியாக வழங்கக்கூடிய அதிகபட்ச தொகை ரூபா ஐந்துஇலட்சம் (ரூ. 500,000) ஆகும்.

(iii) இந்தத் திட்டங்களின் ஒப்புதலுக்கு, திட்ட அறிக்கையுடன் தொடர்புடைய தொழில் விடயத்தில் தொழில்நுட்ப அறிவைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட அரசு நிறுவனத்தின் அதிகாரியின் பரிந்துரையைப் பெறுவது கட்டாயமாகும்.

(2) உள்ளூர் பாரம்பரிய தொழிலில் (ஜவுளி, மரம், களிமண், தோல், பட்டு, தும்பு, தையல்) ஈடுபட்டுள்ள ஒரு தொழிலாளருக்காக தொடர்புடைய உபகரணங்கள் வழங்கப்படலாம். இங்கே, பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

(i) சம்பந்தப்பட்ட தொழிலாளர் தற்போது ஈடுபட்டுள்ள துறை ஒரு பாரம்பரிய தொழில் என்பதை மாகாண கைத்தொழில் பணிப்பாளர் பரிந்துரைக்க வேண்டும்.

(ii) விண்ணப்பதாருக்கு பொருத்தமான உபகரணங்களை வழங்குவது சிறந்தது என, சம்பந்தப்பட்ட கைத்தொழில் விடயம் தொடர்பாக தொழில்நுட்ப அறிவைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட அரசு நிறுவனத்தின் அதிகாரியிடமிருந்து பரிந்துரையைப் பெறுவது கட்டாயமாகும்.

(iii) உபகரணங்களின் மதிப்பில் 30% பயனாளியின் பங்களிப்பின் கீழ் ஒரு வருடத்திற்கு ரூபா ஒரு இலட்சம் (ரூ. 100,000) என்ற உச்ச எல்லையின் கீழ் வழங்கலாம் .

மேலே உள்ள (1) மற்றும் (2) இன் பலாபலன்களை வழங்கும்போது,

உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பயனாளிக்கு நேரடியாக நிதி விடுவிக்கப்படக்கூடாது.

அரசாங்கத்தின் நிலையான கொள்முதல் நடைமுறைகளைப் பின்பற்றி தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதும், தொடர்புடைய பயனாளி பங்களிப்பை அறவிட்ட பின் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதும் செயல்படுத்தும் அதிகாரியின் பொறுப்பாகும்.

(3) தற்போது சுயதொழிலில் ஈடுபட்டுள்ள தொழில்முனைவோர்களுக்கு அல்லது எதிர்காலத்தில் அவர்கள் ஈடுபட விரும்பும் நிறுவனத்திற்கான திறன் அவர்களிடம் இருப்பதாக தொடர்புடைய அதிகார பிரதேசத்தின் பிரதேச செயலாளர் திருப்தி அடையும் பயனாளிகளுக்கு சுயதொழில் உதவியாக நேரடி மானியங்கள் வழங்கப்படலாம். இங்கே, பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும்:

(i) சுயதொழில் உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் அல்லது மூலதனப் பொருட்கள் மட்டுமே வழங்கப்பட வேண்டும். நுகர்வு பொருட்கள்/பொருட்கள் வழங்கப்படக்கூடாது.

(ii) வழங்கப்படும் உபகரணங்கள்/இயந்திரங்கள்/மூலதனப் பொருட்களின் மதிப்பில் குறைந்தபட்சம் 30% பயனாளியின் பங்களிப்பாக பயனாளியிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும்.

(iii) அரசின் பங்களிப்பாக ரூபா ஒருஇலட்சம் என்ற உச்ச எல்லையின் கீழ் இந்த நேரடி மானியங்கள் வழங்கப்பட வேண்டும்.

(iv) மேலே (ii) பிரிவின் கீழ் எவ்வாறு குறிப்பிடப்பட்ட போதும்,

விசேட சூழ்நிலைகளின் கீழ் குறைந்தபட்ச பயனாளி பங்களிப்பு எவ்வளவு சதவீதமாக இருக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரால் முன்வைக்கப்படும் விடயங்களைப் பரிசீலித்த பிறகு, பிரதம செயலாளர் ஒரு முடிவை எடுக்கலாம்.

(v) நேரடி மானியங்களைப் பெறும் பயனாளிகளின் பட்டியல், விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(4) மாகாணத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிலதிபர்கள் மற்றும் மாகாண கைத்தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கைவினைஞர்களின் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்காக பின்வருமாறு பங்களிக்கலாம்:

(i) சந்தையை அறிமுகப்படுத்துதல்

(ii) வர்த்தக மையங்களை நிறுவுதல் மற்றும் அந்த மையங்களை மேம்படுத்துதல்.

(iii) நடமாடும் சந்தைகளையும் கண்காட்சிகளையும் நடாத்துதல்

(iv) உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகள்/கண்காட்சிகளுக்கு தயாரிப்புகளை வழங்குதல். இங்கு அந்த விற்பனை நிலையங்கள்/காட்சியகங்களுக்கு செலுத்த வேண்டிய தொகையில் 50% பயனாளி பங்களிப்பை தொடர்புடைய கைவினைஞரிடமிருந்து வசூலிக்க வேண்டும்

(5) மேல் மாகாண கைத்தொழில் திணைக்களம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் நிறுவப்பட்ட உற்பத்தி மற்றும் பயிற்சி மையங்களுக்கு புதிய தொழில்நுட்பம் மற்றும் பிற பௌதீக வசதிகளை வழங்குதல்.

(6) கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள/ ஈடுபட விரும்பும் தனிநபர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கு பொருத்தமான தொழில் பயிற்சி திட்டங்கள் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டங்களை நடாத்துதல். பின்வரும் விடயங்களை இங்கே கருத்தில் கொள்ள வேண்டும் :

(i) மேல் மாகாண கைத்தொழில் திணைக்களம்/மேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை /தேசிய கைவினை மன்றம் ஆகியவற்றின் பதிவுசெய்யப்பட்ட வள வழங்குநர்களின் குழாமிலிருந்து வளவாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(ii) இலக்கு குழுவைப் பொறுத்து, மிகவும் பொருத்தமான வளவாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்கு, பயிற்சித் திட்டத்தின் தன்மையைப் பொறுத்து, திட்டம் அல்லது செயல்படுத்தும் அதிகாரியிடமிருந்து முன் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

(iii) வளவாளர் பாடப்பிரிவில் தொழில்முறை திறன் கொண்ட நிபுணராகவும், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் சான்றளிக்கப்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

(iv) வளவாளர் ஒரு திறமையான கைவினைஞராக இருந்து அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களை முன்வைக்க முடியாத சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட துறைக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளரிடமிருந்து முன் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

(7) சுயதொழிலில் ஈடுபட்டுள்ள/ ஈடுபட விரும்பும் 18 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பாடநெறிகளைத் தொடர ஏற்பாடு வழங்கப்படலாம் . பின்வரும் விடயங்களை இங்கே கருத்தில் கொள்ள வேண்டும்.

(i) ஒரு நபருக்கு அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபா (ரூ. 100,000) ஒதுக்கப்படலாம். பயனாளியுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு, இந்தத் தொகை நேரடியாக தொடர்புடைய தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

(ii) பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும்போது , பின்வரும் தேவைகளைக் கொண்ட நபர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்:

(அ) வேறு எந்தத் திட்டத்தாலும் காப்பீடு பெறாதவர் மற்றும் இதற்கு முன்பு அத்தகைய அனுசரணைப் படியினைப் பெற்றிருக்காதவர்

(ஆ) தாய் குடும்பத் தலைவராக இருக்கும் ஒரு குடும்பமாக இருத்தல்

(இ) விசேட தேவைகள் உள்ள நபராக இருத்தல்

(iii) குறைந்த வருமானம் பெறாத நபர்களிடமிருந்து தொடர்புடைய பாடநெறி கட்டணத்தில் 30% பயனாளி பங்களிப்பாக வசூலிக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட கிராம அலுவலரால் குறைந்த வருமானம் ஈட்டுபவர்களாக உறுதிப்படுத்தப்பட்ட நபர்களிடமிருந்து பயனாளி பங்களிப்பை வசூலிக்க வேண்டியது அவசியமில்லை.

(8) மேல் மாகாணத்தின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தல். இங்கு பின்வரும் விடயங்களுக்கு கவனம் செலுத்தப்பட வேண்டும்:

(i) தொழில்முனைவோர் பயிற்சி மற்றும் தொழில் பயிற்சி வழங்குதல்.

(ii) விற்பனையாளர்களின் தகவல்களை வலையமைப்பு செய்வதற்கான ஒரு திட்டத்தை செயல்படுத்துதல்.

(iii) மாகாணத்தில் புதிய உற்பத்தியாளர்களைச் ஒன்றுசேர்த்து, அவர்களுக்கான திட்டங்களை நடாத்துதல், அவர்களை மத்திய அரசு நிறுவனங்களுடன் இணைத்து தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்ய பொருத்தமான திட்டங்களை செயல்படுத்துதல்.

(9) கைத்தொழிலினூடாக ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்க

(i) கைத்தொழில் பிரிவிற்காக பசுமை தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்காக உரிய ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் அதற்கேற்ப தொழில்களை மாற்றியமைக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(ii) மத்திய மற்றும் சிறிய அளவான தொழில்களைப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களுக்கு வழிநடாத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.

20. மாகாண வீதி விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்:

(1) மேல் மாகாணத்தில் ‘C’ மற்றும் ‘D’ தரங்களுக்கு உரிய புதிய வீதிகள் மற்றும் பிரவேச வீதிகளை புதிதாக (‘AR’) அமைத்தல், ஏற்கனவே உள்ள வீதிகளை மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்கான பராமரிப்பு. (வீதி மேம்பாட்டின் போது நீர் வடிகாலுக்கு முறையான அமைப்பை உருவாக்க வேண்டும்)

(2) வீதி மேம்பாட்டின் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக, வீதியின் இருபுறமும் வடிகால் அமைப்புகள் நிறுவப்பட வேண்டும், மேலும் மதகுகள் மற்றும் பாலங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

(3) வடிகால் அமைப்புகள் (ஷூ வடிகால்கள் /கொங்கிறீட் வடிகால்கள்), பாலங்கள், மதகுகள், பக்கவாட்டு சுவர்கள் போன்ற மாகாண வீதி அமைப்புடன் தொடர்புடைய கட்டமைப்புகளின் புதிய கட்டுமானம் மற்றும் மேம்பாடு.

(4) (i) காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் அமைந்துள்ள மாகாண வீதி அமைப்பு மற்றும் தொடர்புடைய அமைப்புக்கள்/ கட்டமைப்புகளை அந்த அபாயங்களுக்கு ஏற்ப அவற்றை மீள்தன்மையுடன் மாற்றி மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்தல்,

(iii) அந்தப் பகுதிகளில் அமைந்துள்ள மாகாண வீதி அமைப்பைச் சார்ந்த மண்சரிவுகளைத் தடுக்க பொருத்தமான உத்திகளை (பாலங்கள்/மதகுகள்/பக்கச் சுவர்கள்/வடிகால் அமைப்புகள் போன்றவற்றின் புதிய கட்டுமானம் போன்றன) செயற்படுத்துதல்.

(5) வீதி பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக வீதி அடையாளங்களை பொருத்துதல், வீதி அடையாளங்கள் இடல், குவிந்த கண்ணாடிகள் மற்றும் பாதசாரிகள் கடக்கும் அடையாளங்களை நிறுவுதல். தேவைப்படும்போது மேற்கூறிய விடயங்களுக்கு தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து பரிந்துரைகளைப் பெற வேண்டும்.

21. வீடமைப்பு மற்றும் நிர்மாண விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்:

(1) குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு, மீதமுள்ள வீட்டின் வேலை அல்லது வீட்டின் பழுதுபார்ப்புக்காக நிலத்தின் உரிமையை உறுதிசெய்த பின், ஒரு பயனாளி குடும்பத்திற்கு அதிகபட்சமாக மூன்று இலட்சம் ரூபா (ரூ. 300,000) மற்றும் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபா (ரூ. 100,000) வரை இரண்டு தவணைகளில் அனுசரணை நிதி அல்லது பொருள் உதவி வழங்கப்படலாம்.

(2) நிரந்தர வீடுகள் இல்லாத குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு புதிய வீடுகள் கட்டுவதற்கு நிலத்தின் உரிமையை உறுதிசெய்த பிறகு, ஒவ்வொரு பயனாளி குடும்பத்திற்கும் அதிகபட்சமாக இருபது இலட்சம் ரூபா

(ரூ. 2,000,000) வரை அனுசரணை தொகை தவணைகளில் வழங்கப்படலாம். இந்த வீட்டு உதவி, பிரதேச செயலாளரின் பரிந்துரையின் பேரில், மேல் மாகாண வீட்டுவசதி அபிவிருத்தி குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டு வழங்கப்பட வேண்டும். ஒரு வருடத்தில் அதிகபட்சம் ஆறு புதிய வீடுகளைக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படலாம்.

(3) திடீர் பேரழிவுகளால் (மண்சரிவு, தீ, சூறாவளி, வெள்ளம் போன்றவை) முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு, பிரதேச செயலாளர் மற்றும் மேல் மாகாண வீட்டுவசதி அபிவிருத்திக் குழுவின் பரிந்துரைகளுடன் பிரதம செயலாளரின் ஒப்புதலுக்கு உட்பட்டு அதிகபட்சமாக பத்து இலட்சம் ரூபா (ரூ. 1,000,000) வழங்கப்படலாம். இங்கே, பயனாளி வேறு எந்த அரசு நிதியத்தாலும் காப்பீடு செய்யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

(4) மேலே (1), (2) மற்றும் (3) இலக்கங்களின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளுக்கான பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில், பின்வரும் விடங்களில் குறைந்தபட்சம் ஒன்றையாவது பூர்த்தி செய்யும் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இந்த விடயங்கள் கிராம அலுவலரின் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்:

(i) பாடசாலை பிள்ளைகள்/சிறப்புத் தேவைகள் உள்ளவர்களைக் கொண்ட நபர்கள் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பமாக இருத்தல்.

(ii) குடும்பத்தின் வருமானம் ஈட்டும் நபரின் மரணத்தால் ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட குறைந்த வருமானக் குடும்பமாக இருத்தல்.

(iii) தாய் அல்லது தந்தை மட்டும் இருவரும் மட்டுமே இல்லாத குறைந்த வருமானம் கொண்ட குடும்பமாக இருத்தல்.

22. தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தின் கீழ் பெருந்தோட்டத் துறைக்குரிய தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மட்டும் உரித்துடையதாகும்:

(1) தோட்டங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த தோட்ட வீதிகளை மேம்படுத்துதல்

(i) இங்கு , ஒழுங்கான முறையின் மூலம் விதிகளை துல்லியமாக அடையாளங் காண்பது மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) தோட்ட குடியிருப்புகளுக்குச் செல்லக் கூடிய வீதிகள் மட்டுமே அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

(2) தோட்டங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நீர் மற்றும் மின்சார வசதிகளை வழங்குதல்.

(i) பயனாளி குடும்பத்திற்கு அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபா (ரூ. 100,000) வரையிலான தொகைக்கு உட்பட்டு, தோட்ட வீடுகளுக்கு மின்சார இணைப்பு பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். ஒரு வீட்டிற்கு மின் இணைப்பு பெறுவதற்கு மட்டுமே வழங்கப்படும் இந்தத் தொகை, மின் இணைப்பு வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டும்.

(ii) தோட்ட மக்களுக்கு நீர் வசதிகளை வழங்க தேவையான சமூக நீர் திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படலாம். இங்கு , சம்பந்தப்பட்ட பயனாளிகளினால் உரிய பட்டியலை செலுத்துவது தொடர்பாக முறையான உறுதிப்படுத்தலைப் பெற்ற பின் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

(3) தோட்டங்களில் வசிக்கும் மக்களுக்கான குழு வீட்டுவசதி மேம்பாட்டிற்காக மேல் மாகாண வீடமைப்பு அபிவருத்தி குழுவின் பரிந்துரைகளுடன் ஏற்பாடுகள் ஒதுக்கப்படலாம்.சலுகைகளை வழங்கும் போது நேரடி மானியங்களை வழங்குவதற்கு ஒதுக்கீடுகளை ஒதுக்க முடியாது.

(4) தோட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு சுகாதார வசதிகளை வழங்குவதற்காக அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபா (ரூ. 100,000) வரை.ஏற்பாடுகள் ஒதுக்கப்படலாம்,

23. போக்குவரத்து விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்:

(1) இலங்கை போக்குவரத்து சபையால் பராமரிக்கப்படும் பேருந்து நிலைய முற்றங்கள் தவிர மற்ற முக்கிய பேருந்து முற்றங்களின் கட்டுமானம், மேம்பாடு மற்றும் புனர் நிர்மாணம்.

(2) வீதியின் இருபுறமும் பாதசாரிகள் தங்குமிடங்களை அமைப்பதன் மூலம் பொதுமக்களுக்கு தரமான சேவையை வழங்குதல்.

(3) மாகாணத்திற்குள் பயணிகள் போக்குவரத்து பேருந்துகள், முச்சக்கர வண்டிகள், பாடசாலை பிள்ளைகளின் போக்குவரத்து சேவை பேருந்துகள் மற்றும் பணியாளர் போக்குவரத்து சேவை வாகனங்களால் ஏற்படும் சாலை விபத்துகளைக் குறைப்பதற்கான திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்துதல்.

(4) சமூகத்திற்கு மிகவும் திறமையான மற்றும் ஒழுங்கான பயணிகள் போக்குவரத்து சேவையை வழங்குவதற்காக பேருந்து சாரதிகள், நடத்துனர்கள், பாடசாலை வேன் சாரதிகள் மற்றும் உதவியாளர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் அலுவலக போக்குவரத்து சேவை சாரதிகளுக்கு பயிற்சி அளிக்க பொருத்தமான திட்டங்களை செயல்படுத்துதல்.

(5) பயணிகள் போக்குவரத்து சேவைகளை நெறிப்படுத்தி திறம்படச் செய்வதற்கும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை முறையாக நடத்துவதற்கும் தொழில்நுட்ப கருவிகளை வழங்குதல் மற்றும் பொருத்தமான திட்டங்களை செயல்படுத்துதல்.

(6) காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் மற்றும் அவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கும் போக்குவரத்துத் துறையில் பணிபுரிபவர்களுக்கும் அறிவுறுத்தல்.

24. கூட்டுறவு அபிவிருத்தி விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, நடைமுறைப்படுத்தும் போது பின்வரும் அளவுகோல்களின்படி செயற்பட வேண்டும்.

(1) வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையில் கூட்டுறவு வர்த்தக நிறுவனங்களை (உ.தா. விற்பனை நிலையங்கள், எரிபொருள் நிலையங்கள், கிராமப்புற வங்கிகள், மருந்து கடைகள், பாற் சாலைகள், தொடர்பு மையங்கள் போன்றவை) நவீனமயமாக்குதல்

(2) கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டுள்ள அரசு அதிகாரிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் அதிகாரிகளின் கணக்காய்வு விடயத்தில் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்த பயிற்சித் திட்டங்களைத் திட்டமிட்டு செயல்படுத்துதல்.

(3) கிராமப்புறக் கடன் பட்டோர் நிலமையை நீக்கும் நோக்கத்துடன் சுயதொழில், சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கு குழுக்களில் நிதி சேவை கூட்டுறவு சங்கங்களை (கிராமப்புற வங்கிகள், பிற கூட்டுறவு சங்கங்கள்) இணைத்து தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல்.

(4) பாடசாலைப் பிள்ளைகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் பற்றிய அறிவை வழங்குவதற்காக பாடசாலை கூட்டுறவு சங்கங்களைப் பதிவுசெய்து ஊக்குவிப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

25. கிராம அபிவிருத்தி விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, நடைமுறைப்படுத்தும் போது பின்வரும் அளவுகோல்களின்படி செயற்பட வேண்டும்.

(1) உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள, தனியார் சொத்து அல்லாத, குறிப்பாக அடையாளம் காணப்பட்ட கிராமப்புற உள்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல் மற்றும் மேம்படுத்துதல். இதன் கீழ், சிறிய வீதிகள், சாலைகள், சிறிய பாலங்கள், மதகுகள், கிராம அபிவிருத்திச் சங்க கட்டடங்கள், கிராமப்புற சந்தை வசதிகள், சமூக நீர் திட்டங்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளலாம்.

(2) கிராமப்புற மட்டத்தில் அமைந்துள்ள உள்ளூராட்சி அமைப்புக்கு உரிய வீதி ஒன்றை அபிவிருத்தி செய்யும் போது, திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன், செயல்படுத்தும் அதிகாரி தொடர்புடைய உள்ளூராட்சி அமைப்பின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(3) கிராமப்புற மக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் பொதுப் பணிகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களை கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு வழங்குதல். பின்வரும் விடயங்கள் இங்கே பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(i) மேல் மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கிராமப்புற அபிவிருத்திச் சங்கங்களுக்கு, மேல் மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர்/சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்/கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் அல்லது சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரால் அதிகாரம் அளிக்கப்பட்ட கிராம அபிவிருத்தி அலுவலரின் பரிந்துரையின் பேரில் இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாக நேரடியாக பேணப்பட்டு வரும் கிராமப்புற மேம்பாட்டுச் சங்கமாக வேண்டும்.

(ii) வேண்டுகோள் விடுக்கப்பட்ட பொருட்கள்/உபகரணங்கள், சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் தேவைகளுக்கு போதுமான அளவு சம்பந்தப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் இருக்காமை.

(iii) கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு உச்சமாக ரூபா இரண்டு இலட்சத்தின் (ரூ. 200,000) கீழ் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பொருட்கள்/உபகரணங்களை வழங்குதல்.

(iv) மேல் மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர்/உரிய பிரதேச செயலாளர்/கிராம அபிவிருத்தி பணிப்பாளர் அல்லது உரிய பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட கிராம அபிவிருத்தி அதிகாரியினால் வழங்கப்படும் உறுதிப்படுத்தல் மற்றும் திட்டத்தை செயல்படுத்தும் அதிகாரியின் பரிந்துரை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கிராம அபிவிருத்தி சங்கத்திற்குத் தேவையான நாற்காலிகள், முன்னரே தயாரிக்கப்பட்ட தங்குமிடங்கள் (நடமாடும் கொட்டகைகள்) மற்றும் பொதுத் தேவைக்கு தேவையான பிற பொருட்கள்/உபகரணங்களை கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு வழங்கலாம்.

(4) கிராமப்புற மட்டத்தில் நிறுவப்பட்ட தன்னார்வ சங்கங்களை ஒன்றிணைத்து ஒருங்கிணைப்பதன் மூலம் சமூக வளர்ச்சிக்குத் தேவையான ஒரு வலையமைப்பை உருவாக்குதல் மற்றும் அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை வளர்க்க நடவடிக்கை எடுத்தல்.

(5) கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் தையல் மையங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்க சலைகளுக்கு நீர் மற்றும் மின்சார வசதிகளை வழங்குதல். பின்வரும் விடயங்களை இங்கே கருத்தில் கொள்ள வேண்டும்.

(i) கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் தையல் மையங்கள் பராமரிக்கப்படும் அரசுக்குச் சொந்தமான மற்றும் பிற பொது வளாகங்களுக்கு அந்த நிறுவனம் தொடர்புடைய பட்டியல்களை செலுத்துவதன் கீழ் .நீர் மற்றும் மின்சார வசதிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்படலாம்,

(ii) சம்பந்தப்பட்ட கிராம அபிவிருத்தி அதிகாரிகளின் பரிந்துரைகளுடன், எதிர்காலத்தில் மாதாந்த பட்டியல்களை செலுத்துவது தொடர்பான முறையான உறுதிப்படுத்தலைப் பெற்ற பின், கிராம அபிவிருத்தி சங்க சாலைகளுக்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும்.

(6) கிராம மகளிர் அபிவிருத்தி பயிற்சி மையங்களுடன் சார்ந்து பயிற்சி பாடநெறிகளை செயல்படுத்துதல்.

(i) கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் மாகாண தையல் ஆலோசகர்களால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு உள்ளூர்/வெளிநாட்டு கண்காட்சி வசதிகள் மற்றும் சந்தை வசதிகளை வழங்குதல்

(ii) கிராமப்புற பயிற்சி மையங்களில் பயிற்சி பெறுபவர்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்த தேவையான வசதிகளை வழங்குதல்.

(iii) கிராமப்புற பயிற்சி மையங்களுக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் தேவையான உபகரணங்களை வழங்குதல்.

(7) குடிசைத் தொழில்களுக்குத் தேவையான பயிற்சி, தொழில்நுட்பம் போன்றவற்றை வழங்குதல்.

(8) கிராமப்புற அபிவிருத்தி சங்கங்களின் அலுவலர்களுக்காக களப் பயிற்சி மற்றும் சிறப்பு தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துதல் மற்றும் மாகாணங்களுக்கு இடையேயான அறிவு பரிமாற்றத் திட்டங்கள் தொடர்பான பயிற்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.

(9) (i) கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களின் குடும்பங்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்

(ii) கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் போதைப்பொருள் தடுப்பு திட்டங்கள், சுற்றுச்சூழல் திட்டங்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் போன்றவற்றை செயல்படுத்துதல்.

26. கல்வி விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, நடைமுறைப்படுத்தும் போது பின்வரும் அளவுகோல்களின்படி செயற்பட வேண்டும்.

(1) மாகாண நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி மாகாண சபைக்கு உரிய அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களின் கட்டுமானம், புதுப்பித்தல் மற்றும் பழுது பார்ப்புகளை மேற்கொள்ளல்.

(ii) மலசல கூடங்களை நிர்மாணித்தல், புதுப்பித்தல் மற்றும் பழுது பார்ப்புகளை மேற்கொள்ளல்.

(iii) மின்சார கட்டமைப்புகளை நவீனமயமாக்குதல் மற்றும் பழுது பார்த்தல்

(iv) பாடசாலை விளையாட்டு மைதானங்கள், சிறுவர் பூங்காக்கள் நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்

(v) பாடசாலைகளின் உள்ளக சாலைகளை நிர்மாணித்தல்

(vi) பாதுகாப்பு வாயில்கள், சுவர்கள், பக்கச் சுவர்கள், பாதுகாப்பு வேலிகள் ஆகியவற்றின் கட்டுமானம் மற்றும் பழுதுபார்பு மேற்கொள்ளல்.

(vii) வலயக்கல்வி பணிப்பாளரின், பரிந்துரையின் பேரில், பாடசாலையின் வளர்ச்சிக்கு நேரடியாக பங்களிக்கும் கணினிகள், மேசைகள், நாற்காலிகள், வாத்தியக்குழுக் கருவிகள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்குதல் மற்றும் காணப்படும் உபகரணங்களை பழுது பார்ப்புச் செய்தல்.

(viii) நிர்வாக கட்டடங்களின் கட்டுமானம், புனரமைப்பு மற்றும் பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

(2) பிரதேச செயலாளரால் பரிந்துரைக்கப்பட்டதேவையுள்ள குடும்பங்களில் , புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்களை வாங்க முடியாத ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களில் ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு அதிகபட்சமாக பத்தாயிரம் ரூபா என்பதன் கீழ் புத்தகங்கள், பேனாக்கள், பென்சில்கள், பென்சில் பெட்டிகள், புத்தகப் பைகள், காலணிகள் போன்ற கல்வி உபகரணங்களை வழங்கலாம், குடும்ப வருமான நிலை குறித்து கிராம அலுவலர் மற்றும் அதிபரின் பரிந்துரையைப் பெற்ற பிறகு, வகுப்பு ஆசிரியர் மூலம் சம்பந்தப்பட்ட மாணவருக்கு நன்கொடை வழங்கப்பட வேண்டும். அவ்வாறே மேலும், பாடசாலையில் உள்ள ஏனைய மாணவர்களுக்கு இது குறித்து தெரிவிக்கக்கூடாது, மேலும் இந்த நிதியை பொதுவாக மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் உபகரணங்களை வழங்க பயன்படுத்தக்கூடாது. (தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலை பிள்ளை வேறு எந்த நிதியிலிருந்தும் கல்வி உதவிபெறுவதில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.)

(3) மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் தர அபிவிருத்தி வேலைத்திட்டங்களால் உள்ளடக்கப்படாத திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மாகாண சபைப் பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனோபாவங்களை மேம்படுத்துவதற்காக நடத்தப்படலாம். பயிற்சி பட்டறைகளுக்கான வள பங்களிப்பைப் பெறும் போது உரிய வளவாளர்கள் உரிய துறையில் நிபுணர்களாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(4) பாடசாலை அமைப்பை வினைத்திறனாக பேணிச் செல்வதற்காக நேரடியான பங்களிப்பை வழங்குபவரான கல்வித் துறையுடன் தொடர்புடைய வலய மற்றும் கோட்டை கல்விக் காரியாலயங்களுக்கு பௌதீக வழங்களை வழங்குதல் மற்றும் தேவையான சூழ்நிலைகளில் அதிகாரிகள் பயிற்சி பட்டறைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். இங்கு மாகாண கல்வி பணிப்பாளரின் பரிந்துரைகள் மாகாண கல்வி செயலாளரின் ஒப்புதலுடன் உரிய விடயம் செய்யப்பட வேண்டும். பயிற்சி பட்டறைகளுக்கான வள பங்களிப்பைப் பெறும் போது உரிய வளவாளர்கள் உரிய துறையில் நிபுணர்களாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த நிதியின் கீழ் பின்வரும் முறையில் திட்டங்களை செயல்படுத்தலாம்.

(i) பாடசாலைக் கல்வியை விட்டு வெளியேறும் பிள்ளைகளின் திறன்களுக்கு ஏற்ப தொழிற்கல்வியை நோக்கி செலுத்தக்கூடிய ,தேசிய கொள்கைகளுக்கு ஏற்ப திட்டமிடப்பட்ட சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்.

(ii) விசேட கல்வி மற்றும் முறைசாரா கல்வி பிரிவுகளை ஒழுங்காகப் பேணிச் செல்லத் தேவையான அத்தியாவசிய உபகரணங்களை வழங்குதல்.

(iii) மேல் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் முன்பள்ளிப் பிரிவினால் நடத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சித் திட்டங்கள் மற்றும் மேல் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் முன்பள்ளி அலகின் உத்தியோகத்தர்களுக்கு முன்பள்ளிக் கல்வியை முறைப்படுத்துவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள். (பாலர் பாடசாலை சாசனத்திற்கு இணங்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு)

(iv) தேவை ஏற்பட்டுள்ள, ஊட்டச்சத்து குறைபாடு உள்ளதாக சுகாதாரத் துறைகளால் உறுதிசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் போசாக்கு நிலையை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

(v) தேசிய உணவுப் பாதுகாப்பு த்திட்டம், மாகாண போதைப்பொருள் தடுப்புக்கு தேவையான திட்டம் மற்றும் மாகாண காலநிலைக்கு பளக்கப்படும் திட்டம் உள்ளடங்கிய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(vi) பாடசாலை மாணவர்களின் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு திறன்களை வளர்ப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.

27. கலாச்சார மற்றும் கலை நடவடிக்கை விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, நடைமுறைப்படுத்தும் போது பின்வரும் அளவுகோல்களின்படி செயற்பட வேண்டும்.

(1) மாகாணத்தில் இருக்கும் கலாச்சார பாரம்பரியத்தையும் மரபுரிமையையும் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்குக் வழங்க உதவும் திட்ட முன்மொழிவுகளைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.

(2) மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பதிவுசெய்யப்பட்ட மத வழிபாட்டுத் தலங்களின் கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்த்தல், கழிப்பறைகளை நிர்மாணித்தல் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக மற்றும் பழுது பார்ப்பு, சுகாதார வசதிகளை மேம்படுத்துதலின் கீழ், நீர் வசதிகளை வழங்குதல், நீர் வழங்கல் அமைப்பைப் பழுதுபார்த்தல், மின்சார அமைப்புகளைப் பழுதுபார்த்தல் போன்றவற்றின் பழுது பார்ப்பு போன்ற பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ஒரு வழிபாட்டுத் தலத்திற்கு அதிகபட்சமாக ஐந்துஇலட்சம் ரூபா (ரூ. 500,000.00) வரை, சம்பந்தப்பட்ட பிரதேச செயலகப் பிரிவின் மாகாண கலாச்சார அலுவலரின் ஒப்புதலுடனும் பிரதேச செயலாளரின் பரிந்துரையுடனும் ஏற்பாடுகள் செய்யப்படலாம். முன்னர் நிதி பெறாத மத வழிபாட்டுத் தலங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இது சம்பந்தமாக, ஏற்பாடுகள் வழங்கப்பட்ட ஒரு வழிபாட்டுத் தலத்திற்கு மீண்டும் ஒதுக்கப்படும்போது, முதல் ஏற்பாடுகள் வழங்கப்பட்டதிலிருந்து குறைந்தது 05 ஆண்டுகள் சென்றிருக்க வேண்டும், மேலும் ஏற்பாடுகள் வழங்குவது அதிகபட்சம் இரண்டு தவணைகளுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(3) மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பதிவுசெய்யப்பட்ட அறநெறி பாடசாலைகளின் கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்த்தல், சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், கழிப்பறைகளை நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்த்தல், நீர் வசதிகளை வழங்குதல், நீர் வழங்கல் அமைப்பைப் பழுதுபார்த்தல், மின் அமைப்புகளைப் பழுதுபார்த்தல் போன்றவற்றுக்கு, சம்பந்தப்பட்ட பிரதேச செயலகப் பிரிவின் மாகாண கலாச்சார அலுவலரின் ஒப்புதலுடனும், பிரதேச செயலாளரின் பரிந்துரையின் பேரிலும், ஒரு அறநெறிப் பாடசாலைகளுக்கு அதிகபட்சமாக ஐந்துஇலட்சம் ரூபா (ரூ. 500,000) வரையிலான தொகைக்கு ஏற்பாடுகள் செய்யப்படலாம். இங்கு முன்னர் நிதி கிடைக்கப்பெறாத அறநெறிப்பாடசாலைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இது சம்பந்தமாக, நிதி வழங்கப்பட்ட ஒரு அறநெறிப் பாடசாலைக்கு மீண்டும் ஒதுக்கப்படும்போது, முதல் முறையாக நிதி வழங்கப்பட்டதிலிருந்து குறைந்தது 05 ஆண்டுகள் சென்றிருக்க வேண்டும், மேலும் நிதி வழங்குவது அதிகபட்சம் இரண்டு தவணைகளுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(4) மேல் மாகாணத்தில் இயங்கும் பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கு அறநெறிப் பாடசாலை நடவடிக்கைகளைப் பராமரிக்க அத்தியாவசிய தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படலாம், இது சம்பந்தப்பட்ட பிரதேச செயலகப் பிரிவின் மாகாண கலாச்சார அலுவலரின் ஒப்புதலுடனும் பிரதேச செயலாளரின் பரிந்துரையின் பேரிலும் ஒதுக்கக்கூடிய அதிகபட்ச நிதி இரண்டுஇலட்சம் ரூபா (ரூ. 200,000.00) ஆகும், இங்கு, தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுடன் வழங்கப்பட்ட ஒரு அறநெறிப் பாடசாலைக்கு மீண்டும் நிதி ஒதுக்கப்படும்போது, முதல் நிதி ஒதுக்கீட்டிலிருந்து குறைந்தபட்சம் 05 ஆண்டுகள் கடந்திருக்க வேண்டும், மேலும் நிதி ஒதுக்கீடு அதிகபட்சம் இரண்டு காலகட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(5) பாரம்பரிய நடனங்கள் மற்றும் பிற கலை நடவடிக்கைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்கான பிரதேச மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டத்திற்காக அதிகபட்சமாக இரண்டுஇலட்சம் ரூபா (ரூ. 200,000) ஒதுக்கப்படலாம், மேலும் மாகாண அளவிலான திட்டத்திற்கு அதிகபட்சமாக ஐந்துஇலட்சம் ரூபா (ரூ. 500,000) ஒதுக்கப்படலாம். மேலும், தேசிய மற்றும் மத விழாக்களைக் கொண்டாடுவதற்கான மாகாண நிகழ்ச்சித்திட்டங்களுக்கு, அதிகபட்சமாக எட்டுஇலட்சம் (ரூ. 800,000) வரை நிதி ஒதுக்கீடு செய்யப்படலாம். எந்தவொரு சிறப்பு சந்தர்ப்பத்திலும் இந்த அதிகபட்ச வரம்புகள் மீறப்பட்டால், அந்த திட்டத்திற்கான முறையான செலவு மதிப்பீடு திட்டக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு முன் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

(6) தொல்பொருள் மதிப்புள்ள வழிபாட்டுத் தலங்களில் புனர் நிர்மாண பணிகளை அதிகபட்சமாக பத்து இலட்சத்திற்கு ரூபாக்கு உட்பட்டு மேற்கொள்ளல். இந்தப் புனர் நிர்மாண பணிகள் தொல்பொருள் துறையின் ஒப்புதல் மற்றும் பரிந்துரைகளின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

(7) அரசாங்கத்தால் பதிவுசெய்யப்பட்ட கலை நிறுவனங்களுக்குத் தேவையான இசைக்கருவிகள் மற்றும் உபகரணங்களை (கலை நடவடிக்கைகளுக்கு நேரடியாகப் பயன்படுத்தப்படும் உபகரணங்களாக இருக்க வேண்டும்) வழங்குவதற்கான பயனாளி பங்களிப்பு 50% குறைவான பெறுமதியின் கீழ் அதிகபட்சம் இரண்டுஇலட்சம் ரூபா (ரூ.200,000) வரை, மாகாண கலாச்சார அலுவலரின் ஒப்புதல் மற்றும் தொடர்புடைய பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் ஏற்பாடுகளை ஒதுக்க முடியும்.

(8) மாகாண சபைக்குச் சொந்தமான கலாச்சார மையங்களான கலாகேதா மற்றும் அழகியற் கலயரங்கம் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு உதவும் திட்ட முன்மொழிவுகளை அமைச்சின் செயலாளரின் ஒப்புதலுடன் செயல்படுத்தலாம்.

(9) பல்வேறு கலாச்சார மற்றும் கலைத் துறைகளில் விசேடமான திறன்களை வெளிப்படுத்திய நபர்களைப் பாராட்டும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் மாகாண அளவிலான திட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்படலாம், மேலும் அங்கு நிதிப் பரிசுகள் வழங்கப்பட்டால், திட்டக் குழுவின் முன் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

(10) சமூகத்தின் இரனை மற்றும் கலைத் திறன்களை மேம்படுத்தும் திட்டங்களை செயல்படுத்த, பிரதேச ரீதியில் அதிகபட்சமாக இரண்டுஇலட்சம் ரூபா (ரூ. 200,000) மற்றும் மாகாண அளவிலான திட்டங்களுக்கு அதிகபட்சமாக ஐந்துஇலட்சம் ரூபா (ரூ. 500,000) ஒதுக்குவதன் மூலம் திட்டங்களை செயல்படுத்தலாம், மேலும் வளவாளர் கொடுப்பனவுகள் செலுத்த வேண்டிய சந்தர்ப்பங்களில், திட்டக் குழுவின் முன் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

28. விளையாட்டு விடயத்தின் கீழ் திட்டப் பிரேரணைகளை அடையாளம் காணும் போது பின்வரும் அளவுகோல்களின்படி செயற்பட வேண்டும். அவ்வாறே பின்வரும் துறைகள் உள்ளடங்குமாறு திட்டப்பிரேரணைகளை இனங்காண்பது இடம்பெற வேண்டும்.

(1) மாகாண பாடசாலைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு உரிய விளையாட்டு மைதானங்களைத் தவிர்த்து. மாகாண சபைக்குச் உரிய விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு மையங்கள் மற்றும் ஸ்ரீ போதி விளையாட்டு வளாகம் உள்ளிட்ட அத்துடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்,

(2) மேல் மாகாணத்தில் விளையாட்டுகளுடன் தொடர்புடைய பகுதியினரின் திறன்களை வளர்ப்பதற்காக.

(i) விளையாட்டு கல்வித் திட்டங்களை நடத்துதல்.

(ii) தேவைகள் அடையாளம் காணப்பட்ட விளையாட்டுகளுக்கான விளையாட்டுப் பயிற்சிக் குளுக்களை நிறுவுதல் மற்றும் பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.

(iii) மாகாண, மாவட்டம், பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு மட்டங்களில் பல்வேறு நிகழ்வுகளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்.

(3) சர்வதேச, தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் விளையாட்டுத் துறையில் சிறப்பான திறன்களை வெளிப்படுத்திய விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளையும், அதற்கு பங்களித்த விளையாட்டு அதிகாரிகள் மற்றும் பயிற்சியாளர்களையும் பாராட்டுவதற்கு மாகாண மட்டத்தில் பாராட்டுத் திட்டங்களை நடத்துதல்.

(4) மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் மற்றும் மாகாண விடயப்பெறுப்பு அமைச்சின் செயலாளரால் அதிகாரம் வழங்கப்பட்ட விளையாட்டு அதிகாரியின் பரிந்துரைகளின் பேரில்.

(i) பிரதேச மட்டத்தில் வலய போட்டிகளுக்கு விளையாட்டு வீர வீராங்னைகளை ஈடுபடுத்தும் மற்றும்/அல்லது விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்கும் அத்துடன் குறைந்தபட்சம் 3 வருடங்களாகச் செயல்படும் மாகாண சபையில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் பதிவினை இற்றைப்படுத்திய விளையாட்டுச் சங்கம்/ விளையாட்டு கழகத்தின் மேம்பாடு மற்றும் தனிப்பட்ட ரீதியிலல்லாத உடற்பயிற்சி நிலையத்திற்கு இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை ரூபா இரண்டு இலட்சம் என்ற உச்ச எல்லையின் கீழ் ( ரூ.200,000) விளையாட்டு உபகரணங்களை வழங்க முடியும்.

(ii) மாவட்ட மட்டத்திலோ அல்லது மாகாண மட்டத்திலோ விளையாட்டுப் போட்டிகளைப் பிரதி நிதித்துவப்படுத்தும் விளையாட்டு வீரர்களுக்கும், தேசிய விளையாட்டுகளுக்காக மேல் மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கும் குறிப்பிட்ட அளவுகோல்களின் அடிப்படையில். மாகாண விளையாட்டுப் பணிப்பாளரின் பரிந்துரையின் பேரில், ஒவ்வொரு நபருக்கும் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை, அதிகபட்சமாக ஒருஇலட்சம் ரூபா (ரூ. 100,000) வரை விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ஆடைகளை வழங்குதல்.

(iii) தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டு வீர வீராங்கனைகளின் ஊட்டச்சத்து தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக குறைந்தபட்சம் ஒரு வருட காலத்திற்கு, மாதத்திற்கு அதிகபட்சமாக பத்தாயிரம் ரூபா (ரூ. 10,000) என்ற உச்ச எல்லையின் கீழ் தனியார் துறை பங்களிப்புகள் ஊட்டச்சத்து உதவிகளை வழங்குதல்.

(iv) இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச அளவிலான சாதனைகளைப் பெறும் மாகாண விளையாட்டு வீர வீராங்கனைகளை ஊக்குவிக்க அதிகபட்சமாக ஒருஇலட்சம் ரூபா (ரூ. 100,000) வரை நிதி உதவி வழங்குதல்.

(5) தேசிய விளையாட்டுப் போட்டியில் மேல் மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய மட்ட சாதனைகளைப் புரிந்த பாடசாலை விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் விளையாட்டுப் போட்டிகளுக்காக

வெளிநாடுகளுக்குச் செல்லும்போது, சம்பந்தப்பட்ட பயணத்திற்காக ஐந்துஇலட்சம் ரூபாவுக்கு மேற்படாத உதவித் தொகை சம்பந்தப்பட்ட விளையாட்டு அதிகாரி, மாவட்ட விளையாட்டு அதிகாரி ஆகியோரின் பரிந்துரையின் பேரில் அமைச்சின் செயலாளரால், பிரதான கணக்காளர், விளையாட்டு பணிப்பாளர், உதவி விளையாட்டு பணிப்பாளர் (தொழில்நுட்பம்), ஆகியோரைக்கொண்ட குழு திர்மானிக்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை உரிய விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு வழங்க வேண்டும். (வேறு எந்த நிறுவனமோ அல்லது பகுதியோ பங்களிக்கவில்லை என்றால் மட்டுமே இந்த நிதி உதவி வழங்கப்பட வேண்டும்)

(6) மாகாண மக்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்த தேவையான திட்டங்களை செயல்படுத்துதல்.

(7) பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் விளையாட்டுத் துறையின் பங்காளர்களை முறையாக ஒழுங்கமைத்து, தொடர்புடைய திட்டங்களை நடத்துதல்.

29. இளைஞர் விவகார விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளம் காணும் போது, ஒப்புதல் அளிக்கும்போது, பின்வரும் அளவுகோல்களின்படி செயற்பட வேண்டும்.

(1) இளைஞர் சமூகத்தின் தொழில் திறன்களை வளர்ப்பதையும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலை சந்தைகளை இலக்காகக் கொண்ட தொழில் பயிற்சிக்காக பயனாளி வசிக்கும் பிரதேச செயலகத்தில் தொழில் பயிற்சிக்குப் பொறுப்பான திறன் மேம்பாட்டு அலுவலரின் ஒப்புதல் மற்றும் பிரதேச செயலாளரின் பரிந்துரையின்படி, 16 முதல் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு NVQ மட்டத்தில் கற்கைநெறிகளுக்கு அனுப்புவதற்காக அதிகபட்ச பாடநெறி கட்டணம் ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 50,000). வழங்குதல் பயனாளியுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின், தொடர்புடைய தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு மட்டுமே இந்தக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும்.

(2) மாகாணத்தில் இளைஞர் சமூகத்திற்கு தலைமைத்துவப் பயிற்சி, மனப்பான்மை மற்றும் ஆளுமை மேம்பாட்டுத் திட்டங்கள், போதைப்பொருள் தடுப்புத் திட்டங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பத்துடன் பரிச்சயம் தொடர்பான திட்டங்களை செயல்படுத்துதல்

(3) மாகாணத்தில் உயர்கல்வித் தகுதிகளைப் பெறாமல் பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களை முறையான தொழிற்கல்விக்கு வழிநடத்துவதற்கு பொருத்தமான திட்டங்களை செயல்படுத்துதல்.

30. இந்த விதிகள் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2190/25 ஆம் இலக்க 2020, ஓகத்து 25 ஆந் திகதி விசேட வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்டு அவ்வப்போது திருத்தப்பட்ட, மேல் மாகாண சபை நிதிக்குரிய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல் தொடர்பான விதிகள் தொகுப்பு மற்றும் அதற்கான திருத்தங்கள் இதன் மூலம் இரத்து செய்யப்படுகின்றன.

31. இந்த விதிகளின் கீழ் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் சொற்களுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்பட்டால் , சிங்கள சொல்லே மேலோங்கும்.

EOG 02-0114

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.